இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 449 ● 1994 ஜூன் 17 வெள்ளிக்கிழமை

**தொழிலாளர் பேராளர் மாநாடு**

★ தேசியவாதத் துரோகத் தொழிலாளர் அதிகாரத்துவங்களில் இருந்து பிரிவோம்!

★ தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

★ ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்கத்தை வெளியேற்று!

★ தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

**கொழும்பு பொது நூலக கேட்போர் கூடம்**
**ஜூன் 19ம் திகதி ஞாயிறு காலை 10 மணி**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

University of Jaffna Sri Lanka
RECEIVED
994-0--
Periodicals Division
Library

# வர்க்கப் போராட்டத்தின் புதிய கட்டம்

## புரட்சிகர வேலைத்திட்டமும் தலைமையும் வேண்டும்

வர்க்கப் போராட்டத்தின் புதிய அபிவிருத்தியினை கடந்த சில தினங்களாக வெளிப்படத் தொடங்கிய தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களும், பிரச்சாரங்களும் காட்டிக் கொண்டுள்ளன.

ஜூன் 4ம் திகதி தொடக்கம் 6ம் திகதி வரையில கொழும்புத் துறைமுகத்தின் 16,000 தொழிலாளர்கள் தீர்க்கமான வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். சீ. எம். யூ— யூ. என். பி. தொழிற் சங்கத் தலைவர்களினாலேயே தொழிலாளர்கள் வேலைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர், விபத்துக்குள்ளான ஒரு தொழிலாளிக்குத் துறைமுக வைத்திய நிலையத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்படாததால் ஏற்பட்ட தீங்கினை எதிர்த்தே தொழிலாளர்கள் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது தமது சேவை நிலைமையையிட்டு தொழிலாளர்களின் ஆத்திரத்தினை மட்டுமன்றி, யூ.என்.பி. அரசாங்கம் தொடுக்கும் தாக்குதல்கள் தொடர்பாக தொழிலாளர் வர்க்கத்தினுள் இருந்துவரும் கொதிப்பினையும் காட்டிக் கொண்டுள்ளது.

ஜூன் 9ம் திகதி இலங்கை 'ரெலிகொம்' நிறுவனத்தினைச் சேர்ந்த இரண்டு ஊழியர்கள் ''பாதுகாப்புச் சேவையில்'' ஈடுபடும் பொலிசாரால் ஒடுக்குமுறையை தூண்டும் விதத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலை எதிர்த்து அந்நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து பிரச்சாரத்தில் இறங்கினார்கள். பொலிசாரை கூட்டுத்தாபன பூமியில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக விளங்கியது. பொலிசாரை நீக்கி இராணுவத்தினைப் போடுவதற்கு தொழிற்சங்கத் தலைவர்கள் இணங்கிக் கொண்டு வேலை நிறுத்தத்தினை நிறுத்தினர்.

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கம் ''மேலதிக வேலை செய்ய மறுக்கும்'' எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் சம்பள உயர்வு உட்பட்ட அநேக கோரிக்கைகளை உள்ளடக்கிய பிரச்சார இயக்கத்தினைத் தொடுத்தது.



இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் மறியல் போராட்டத்தில்

மருதானை புகையிரத தாபரிப்பு நிலையத்திலனைச் சேர்ந்த ஊழியர்கள் ஊக்குவிப்பு கொடுப்பனவு பற்றிய கோரிக்கையின் மீது நிர்வாகம் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பியதை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்கினர். அவ்வாறே இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் சம்பளம் உட்பட்ட பல கோரிக்கைகளின் மீது வேலை நிறுத்தத்தில் குதிக்க ஆயத்தமாகி வருகின்றார்கள். ஜூன் 10ம் திகதி களுத்தறை ஏ. எம். டபிள்யூ. கம்பனியைச் சேர்ந்த தொழிலாளர்களின் போராட்டம் வெடித்தது. மூன்று தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ய நிர்வாகம் எடுத்த முடிவினை எதிர்த்தே இது வெடித்தது. நாடு பூராவும் தபால் ஊழியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர். பதுளை மாவட்டத்தில் ஊனுகல தோட்டம் உட்பட்ட பல தோட்டங்களில் தொழிலாளர்கள் நிர்வாகங்களின் பல்வேறு தாக்குதல்களையும் எதிர்த்து போராட்டத்தில் இறங்கியுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

இப் போராட்டங்களுடன் கைகோர்த்த வண்ணம் ஏழை விவசாயிகளிடையே பதட்டமும் பிரச்சாரமும் வளர்ச்சி கண்டு வருகின்றது. பொலநறுவை, கிராந்துறு கொட்டேயைச் சேர்ந்த 19 விவசாயிகள் வங்கி விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமலும் படுமோசமான வறுமையினாலும் தற்கொலை செய்து எதிர்ப்புக் காட்டிக் கொண்டனர். விவசாயிகளின் போராட்டம் வெடிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு முதலாளித்துவ சி. ல. சு. க.வும் அதைச் சூழ திரண்டுள்ள விவசாயிகள் அமைப்புக்களும் அரசாங்க சார்பு அற்ற அமைப்புக்களும் எதிர்ப்பு இயக்கத்தினை ஏற்பாடு செய்யும் சாட்டில் களத்தில் இறங்கியுள்ளன.

இலவசக் கல்வி வெட்டினை எதிர்த்தும் வேலையின்மைக்கு எதிராகவும் பல்கலைக் கழக மாணவர்களிடையே பிரச்சாரம் வளர்ச்சி கண்டு வருகின்றது. கம்பஹா ஆயுள்வேதக் கல்லூரிக்கு பல்கலைக் கழக அந்தஸ்து கோரி மாணவர்கள் நடாத்தும் பிரச்சாரத்தின் ஒரு பாகமாக கடந்த வாரம் கொழும்பு, கம்பஹா முதலிய இடங்களில் மறியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அதேவேளையில் றுகுணு பல்கலைக் கழக மாணவர்கள் வதிவிட வசதிகள் செய்து தரும்படி கோரி விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும், வங்கிகளும் உலகளாவிய ரீதியில் கட்டவிழ்த்து விட்டுள்ள தாக்குதல்களின் ஒரு பாகமாக இலங்கை யூ. என். பி. அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் நடைமுறைப்படுத்தியுள்ள பேரழிவுகளுக்கு எதிராகவே தொழிலாளர் வர்க்கத்தினதும் ஏனைய ஒடுக்கப்படும் மக்களதும் இப்போராட்டங்கள் புதிய சுற்றாக வெடித்துக் கொண்டுள்ளன. தனியார் மயமாக்கத்தினால் தொழில் அழிவும், சமூக நலன்புரி சேவைகளின் வெட்டும், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வும் இலாப உழைப்புக் கொள்ளைக்கான நிலைமைகளை மேலும் மேலும் விஸ்தரிக்கின்றது. இதன் மூலம் யூ. என். பி. அரசாங்கம் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை கசக்கிப் பிழிந்துள்ளது. இந்த வருடத்தின் தொடக்கத்தில் நூற்றுக்கு 11.7 வீதமாக குறைந்துள்ளதாக அரசாங்கம் கூறிக் கொண்ட உத்தியோகபூர்வமான பண வீக்க வீதம் மார்ச்சில் 14.53க்கும் ஏப்பிரலில் 16.98க்கும் ஏறியுள்ளது. இது இவ்வருட இறுதியில் நூற்றுக்கு 22 வீதமாக உயரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் அவுஸ்திரேலியன் 'பிஸ்னஸ் ஏசியா' சஞ்சிகைக்கு ஜனாதிபதி விஜேதுங்க வழங்கிய பேட்டியில் தனியார் மயமாக்கத்துக்கென பட்டியல் போடப்பட்டுள்ள 69, அரச நிறுவனங்களுள் எஞ்சியுள்ளதையும் மிச்சம் பிடிக்காமல் தனியார்மயப்படுத்துவதாக தெரிவித்துள்ளார். அத்தோடு சுதந்திர வர்த்தக வலயம் என்ற முறையில் ஏனைய நாடுகளுடன் போட்டியிட்டு இலாப உழைப்பினைச் சுரண்டும் நிலைமைகளை அபிவிருத்தி செய்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் விதித்துள்ள கட்டளைகளதும் திட்டங்களதும் அடிப்படையில் தொடுக்கப்படும் தாக்குதல்கள் உக்கிரம் அடைகின்றது. இம்முறைத் தேர்தலில் வெற்றிகொள்ளும் சூழ்ச்சியாக விஜேதுங்க சமீபத்தில் வெட்டிய உதவி மானியங்களில் ஒரு பகுதியை வழங்க தீர்மானித்த சமயத்தில் ச. நா. நிதியமும் உலக வங்கியும் பாய்ந்து விழுந்தன. எவ்வளவு கடுமையான தாக்குதல்களை நடாத்தும் திசையில் இலங்கை முதலாளிகளைக் கொண்டு செல்ல ஏகாதிபத்தியவாதிகள் முயல்கிறார்கள் என்பதை இது காட்டியது.

இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்கள் இந்தப் பின்னணியிலேயே அபிவிருத்தி காணத் தொடங்கியுள்ளன. உலகளாவிய ரீதியில் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் இராட்சத வங்கிகளும் இவற்றின் ஏஜண்டு அரசாங்கங்களும் தொடுக்கும் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டங்களுடன் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டமும் இணைந்து கொண்டுள்ளது. நீண்டகாலத் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களின் மூலம் வெற்றி கொள்ளப்பட்ட நலன்புரி வேலைத் திட்டங்களை வெட்டிச் சரிப்பதற்கும் வேலை நீக்கங்களுக்கும், சேவைநிலைமைகள் வெட்டுக்கும் எதிராக ஐரோப்பாவிலும், யப்பானிலும் போராட்டங்கள் வளர்ச்சி கண்டு வருகின்றது. இந்தியாவின் பொருளாதாரத்தினை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்குத் திறந்து விட்டு உலக வங்கித் திட்டங்களை அமுல் செய்யும் திட்டத்துக்கு எதிராகத் தோன்றும்

(12ம் பக்கம் பார்க்க)

**வடக்கு— கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பணிக்குழுவின் கோரிக்கையும் தமிழ் தேசிய இனப் பிரச்சினையும்

## எண்ணம்

கொழும்பில் வாழும் உயர்மட்ட தமிழ் முதலாளித்துவ அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், உயர்தொழில் நிபுணர்கள் எண்பதின்மரைக் கொண்டு நிறுவப்பட்டுள்ள ''கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பணிக்குழு'' தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்படி யூ என் பி, சிலசுக உட்பட்ட சிங்கள முதலாளித்துவக் கட்சிகளைக் கேட்டுக்கொண்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம்பெற்றுவரும் இனவாத யுத்தம், ஒடுக்குமுறை, ஆத்திரமூட்டல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நாசங்கள் பற்றிக் குறிப்பிடும் இந்த அறிக்கை, தமிழ்மக்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழவேண்டும் என ஜனாதிபதி விஜேதுங்க அரசாங்கமும் சிலசுக தலைவர்களும் எழுப்பிவரும் இனவாதக் கர்ஜனைகளை கண்டனம் செய்துள்ளது. இறுதியில் இந்த அறிக்கை, சிங்கள முதலாளித்துவக் கட்சிகள் கீழ்க்காணும் நடவடிக்கையை எடுக்க ''சிங்கள மக்கள்'' செயல்பட வேண்டும் எனக் கோருகின்றது.

''தமிழர்களும் தனித்துவமானவர்கள் என்ற அடிப்படையில் தமிழர்களின் பராதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையை சிங்கள மக்கள் தமது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஊடாக அங்கீகரிக்க வேண்டும். சிங்கள மக்கள் தமது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஊடாக தமிழர் பிரச்சினைக்கான தமது தீர்வினை உடனடியாகவும் பகிரங்கமாகவும் முன்வைக்க வேண்டும். தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணுமுகமாக தமது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஊடாக பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.''

''சிங்கள மக்களின் அரசியல் தலைமைத்துவம்'' என இந்தப் ''பணிக்குழு'' கருதுவது யூ என் பி, சிலசுக உட்பட்ட சிங்கள முதலாளித்துவக் கட்சிகளையே; தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் தலைவர்களும் எங்ஙனம் தாம் 'தமிழ் மக்களை' பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்கின்றனவோ அங்ஙனமே சிங்கள முதலாளித்துவக் கட்சிகளும் தாம் 'சிங்கள மக்களை' பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்கின்றன. ஆதலால் அவர்கள் உரியமுறையில் தமது மகஜரை யூ என் பி, சிலசுகவிடம் அனுப்பி வைத்துள்ளன. ஐந்து தசாப்தங்களாக கடைகெட்ட தமிழர் விரோத — சிங்கள இனவாத ஒடுக்குமுறையினதும் ஆத்திரமூட்டல்களதும் சிருஷ்டியாளர்களான இந்த அடக்குமுறை முதலாளித்துவக் கட்சிகள் ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளின் தீர்வாளர்களாகப் பரிணாமம் அடைவது எப்படி? மீண்டும் ஒருமுறை தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் படுவங்குரோத்து இங்கு நிர்வாணக் கோலம் எடுத்துள்ளது.

1948ல் அரசியல் அதிகாரத்தினைத் தமது கரங்களுக்கு மாற்றிக் கொண்டதில் இருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து முதுசமாகப் பெற்ற இனவாதப் பிளவுகள் மூலம் வர்க்க ஆட்சியைக் கொண்டு நடாத்துவது இலங்கை முதலாளி வர்க்கத்தின் முக்கிய அரசியல் விதிமுறையாகிற்று. சிங்கள முதலாளி வர்க்கம் தமிழர் விரோத இனவாதத்தினை தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை இனவாதக் கோட்டின் ஊடே பிரித்துப் போடப் பயன்படுத்தினர். முதலாளி வர்க்கத்தின் நெருக்கடி உக்கிரம் அடையும் அளவுக்கு இனவாத ஆத்திரமூட்டல்களும், ஒடுக்குமுறைகளும் உக்கிரம் கண்டன.

1977ல் ஆட்சிக்கு வந்த ஜயவர்தன அரசாங்கம் திறந்த பொருளாதாரம் என்ற பேரில் ஏகாதிபத்தியவாதிகளின் புதிய அவசியங்களுடன் பிணைக்கப்பட்ட தமது வர்க்க ஆட்சியை கொண்டு செல்வதற்கு முதலாளி வர்க்கத்தின் வேலைத்திட்டத்தினைப் புதுக்கியமைக்கும் போது தமிழர் விரோத இனவாத அடக்குமுறையை யுத்தத்தின் மட்டத்துக்கு உயர்த்தியது. ஏகாதிபத்தியவாதிகளினால் சிபார்சு செய்யப்பட்ட உக்கிரமான சுரண்டலை ஊர்ஜிதம் செய்தல், தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் வெற்றி கொண்டிருந்த அனைத்து உரிமைகளையும் நாசமாக்குதல், நாற்றமெடுத்த முதலாளி வர்க்கத்தின் நெருக்கடியினைத் திணிக்கும் இனவாத இரத்தக் களரிகளைக் கட்டவிழ்த்து விடுதல் மூலம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்துவது முன்னொருபோதும் இல்லாத மட்டத்துக்கு உயர்த்தப்பட்டது. ஒடுக்குமுறைக்கு எதிராக எழுச்சி கண்ட தமிழ் மக்களை நசுக்க 1983ன் இரத்தக் களரியும், நீண்ட யுத்தமும், 1987 இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பும் சிங்கள முதலாளி வர்க்கத்தின் பதிலாகியது. ஏகாதிபத்தியத்துடன் பிணைக்கப்பட்டு தொழிலாளர்-ஒடுப்படும் மக்களுக்கு என்றும் கிடுநடுங்கி வாழும் பின்தங்கிய நாடுகளின் முதலாளி வர்க்கம், பல்வேறு தேசிய இனங்களுக்கு இடையே சமத்துவத்தினை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் தேசிய ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்வதிலும், விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும் வெற்றி காணமாட்டாது என்ற உண்மையை இலங்கையின் முதலாளி வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தினால் தோய்த்து எழுதியுள்ளது.

### தமிழ் முதலாளி வர்க்கம்

தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் தலைவர்களும் இந்த இனவாத நெருப்புக்கு எண்ணெய் வார்ப்பவர்களாகினர். ஒரு முறை சிங்கள முதலாளி வர்க்கத்துடனும் மறுமுறை இந்திய முதலாளி வர்க்கத்துடனும் சமரசம் செய்து கொள்வதன் மூலம் தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் சுரண்டலில் தமது பங்கினைச் சாக்க இடைவிடாது முயன்று வந்தனர். இதன் பொருட்டு தமிழ் இனவாதத்தினைத் தூண்டி வந்தனர். அது தமிழ் பேசும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களைத் தமது பிடிக்குள் வைத்திருக்கவும் தீவின் தொழிலாளர் வர்க்கத்தினைப் பிளவுபடுத்தி வர்க்க ஆட்சியை தொடர்ந்து நடாத்த முண்டுகொடுக்கும் முதலாளித்துவ அவசியத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட விதிமுறையாக விளங்கிற்று.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தின் இறுதித் தசாப்தத்திலும், சுதந்திரம் எனப்பட்டதன் பின்னர் கழிந்து சென்ற ஒரு தசாப்தத்துக்கும் மேற்பட்ட காலப் பகுதியிலும் இனவாதத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தது தொழிலாளர் வர்க்கமே. தொழிலாளர் வர்க்கத்தினைச் சூழ ஏனைய ஒடுக்கப்படும் மக்கள் ஈர்க்கப்பட்டனர், முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் நெருக்கடி உக்கிரம் அடையும் நிலைமையில் 1964ல் முதலாளித்துவ சி. ல. சு. க. வினுள் நுழைந்து கொண்டதன் மூலம் சமசமாஜ கட்சி சிங்களம், தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தின் இந்த அனைத்துலகவாத ஐக்கியத்துக்கு இறுதி அடி கொடுத்தது. தமிழ் முதலாளித்துவத் தலைவர்கள் வடக்கு-கிழக்கு மாகாண ஒடுக்கப்படும் மக்கள் மீது தமது ஆதிக்கத்தினை இறுக்கிக் கொள்ளவும் விஸ்தரிக்கவும் வாய்ப்பான நிலைமையை உருவாக்கியது சமசமாஜ பப்லோவாதிகளின் மாபெரும் காட்டிக்கொடுப்பே.

பாரம்பரிய தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின்-தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி -வங்குரோத்து முதலாளித்துவ நலன்களுக்கான வேலைத்திட்டங்களும் அம்பலமாகியதைத் தொடர்ந்து 'ஆயுதப் போராட்டத்தின்' தமிழ் குட்டி முதலாளித்துவப் 'புதிவீடு' முன்வைக்கப்பட்டது. பாரம்பரிய தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் தோல்வியைத் தழுவிக் கொண்ட நிலையிலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் தோன்றியது.

இன்று இரண்டு தசாப்தங்கள் கழிந்து விட்டன. இலங்கையின் விஜேதுங்க அரசாங்கம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கொடிய சுரண்டலுக்கு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைப் பலியிடும் நிலைமைகளை காட்டுமிராண்டி மட்டத்துக்கு உயர்த்தும் பொருட்டு இனவாத யுத்தத்தினைத் தூண்டி வருகின்றது. முதலாளி வர்க்கத்தின் மற்றுமோர் பிரிவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாளித்துவத் தலைவர்களுடன் சமரசம் செய்து கொள்வதன்மூலம் இலங்கை-தமிழ் ஈழம் பிராந்தியங்கள் இரண்டிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைக் கசக்கிப் பிழியும் ஒரு திட்டத்தினைத் தயார் செய்து வருகின்றனர். ஏகாதிபத்தியவாதிகள் இப்பிராந்தியத்தில் சுரண்டலுக்கான நல்ல நிலைமைகளை உருவாக்கும் திசையில் இவர்களை நெறிப்படுத்தச் செயற்படுகின்றனர். மத்திய கிழக்கில் பீ. எல். ஓ—இஸ்ரேல் பாணியிலான சமரசத்தினை விடுதலைப் புலிகள்—இலங்கை அரசாங்கத்தின் இடையே திணிக்க ஏகாதிபத்தியவாதிகள் பிரேரித்துள்ளனர். அதே சமயம் அவசியப்படின் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையுடன் வேறான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவும் ஏகாதிபத்தியம் பின்வாங்காது. இலங்கை முதலாளிகளுடன் சுரண்டலின் பங்கினைப் பகிர்ந்துகொள்ள தமது தயார் நிலையினை வெளிப்படுத்திக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள், ஏகாதிபத்தியத்துடன் தனியான கொடுக்கல் வாங்கலில் ஈடுபட வழிமேல் விழிவைத்துள்ளது பற்றி வெளியிட்டது ஒரு தடவை, இரு தடவை அல்ல. நாற்றம் கண்ட ஏனைய தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் முதலாளித்துவ அரசின் கருவியாகியுள்ளன.

''கொழும்புவாழ் தமிழ்பக்களின் பணிக்குழு'' என்ற பேரில் இப்போது அமைக்கப்பட்டுள்ள தமிழ் முதலாளித்துவ அமைப்பு-இலங்கை முதலாளித்துவ வர்க்கம் முகம் கொடுத்துள்ள நெருக்கடியின் மத்தியில் ஏகாதிபத்திய ஏஜன்சியாக ஆட்சிக்குப் போட்டியிடும் சிங்கள முதலாளித்துவக் கட்சியுடன் பேரம் பேசுவதில் இறங்குவதற்கெனத் தயார் செய்யப்பட்ட ஒரு இயக்கமேயன்றி வேறொன்றும் அல்ல. அதன் பேரில் இனவாத ஒடுக்குமுறையினையிட்டு தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே கொதித்துக் கொண்டுள்ள குரோதத்தின் மீது காலூன்றிக் கொள்ள முயலும் ஒரு இயக்கமாகும்.

இந்தத் தமிழ் முதலாளித்துவக் குழு தேடுவது தமிழ் ஒடுக்கப்படும் மக்களதும்—தொழிலாளர்களதும்—ஏழை விவசாயிகளதும் இளைஞர்களதும்-மற்றும் ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினரதும் — பிரச்சினைகளுக்கான தீர்வு அல்ல. தமது முதலாளித்துவச் சுரண்டல் அவசியங்களைப் பேணிக் கொள்ளும் பிரச்சினைக்கான தீர்வேயாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி, டெலோ, புளொட், ஈபீஆர்எல்எப் முதமுதலான அமைப்புக்களதும் விடுதலைப் புலிகளதும் நிலைப்பாடு இதுவே. தமது இயக்கத்தினால் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொணர முடியாது போகுமிடத்து வேறான ஒரு ஆட்சிப் பிராந்தியங்களாக ஏகாதிபத்தியவாதிகளின் உதவியைப் பெற்றுக் கொள்ள இந்தச் சகல அமைப்புக்களும் தயாராக உள்ளன.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எந்தவொரு ஜனநாயக உரிமையைப் பேணவும் இலாயக்கற்ற வங்குரோத்து வர்க்கமாகும். அவ்வாறே இந்த முதலாளி வர்க்கத்தின் சகல பிரிவினரும் ஏகாதிபத்திய ஒடுக்குவோனின் மடியில் பதுங்கிக்கொண்டு இம்மக்களை ஒடுக்குமுறையின் காலடியில் தள்ளிவிடச் செயற்படும் பிற்போக்குச் சக்திகளாகப் பரிணாமம் அடைந்துள்ளன.

இன்று உற்பத்தி பூகோளமயமாகியுள்ள நிலையில் முன்னர் போல் அரச எல்லைக்குள் கட்டுண்டு போய் விடாது, பல்வேறு பிராந்தியங்களினுள்ளும் ஊடுருவி சுரண்டலைத் தொடர ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களால் முடியும். அத்தகைய ஒரு பிராந்தியத்தின் கொம்பிரதோர்களாக செயற்படும் தகுதியும் தேவையும் விஜேதுங்க அரசாங்கத்துக்கும் இலங்கை முதலாளிகளுக்கும் மட்டுமன்றி வடக்கு—கிழக்கு மாகாணத் தமிழ் முதலாளிகளுக்கும் உண்டு. ஏகாதிபத்தியவாதிகள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி பெரும் கருணையுடன் இப்போது பேசத் தொடங்கியிருப்பது அனைத்துலக மூலதனத்தின் உக்கிரமடையும் சுரண்டல் தேவைகளுக்குத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அடிமைப்படுத்தும் பொருட்டு பிரிவினையின் ஆயுதமாக மட்டுமல்லாது இங்ஙனம் இவற்றை பங்கு போட்டுக்கொள்ளும் தேவையினாலும் ஆகும்.

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுஸ்லாவுக்கான பாதை: சுலோட்டரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

### பாகம்—1

பால்கனில் மிகப் பிரமாண்டமான சோகங்கள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் பயங்கரமான துயரங்களுக்கு உள்ளான மக்கள் மீண்டும் ஒரு தடவை இரத்தக் களரியினுள் தள்ளப்பட்டுள்ளனர்.

வரலாற்றின் கொடூரமான திருவிளையாடல்களில் ஒன்று—இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தலை நீட்டிய மாபெரும் பிரச்சினைகள் எமது காலத்திலும் கூட தீர்வு காணப்படாது இருந்து வருவதோடு—வெடித்துச் சிதறும் சக்தியுடன் மீண்டும் தலையெடுத்துள்ளது.

முன்னைய பால்கன் யுத்தங்களில் போன்று பெரும் வல்லரசுகள் தமது கரங்களை நெருப்பில் சூடாக்கிக் கொள்கின்றன. அவை சேர்பியர்களையும், முஸ்லீம்களையும், குரோஷியர்களையும் ஆளையாள் கொன்றுதள்ள ஊக்குவிப்பதோடு, யூகோசலாவியாவை இராணுவத் தலையீட்டுக்கான ஒரு பரீட்சைத் திடலாகப் பயன்படுத்துகின்றன. இதே சமயம் வாஷிங்டனிலும், பொன்னிலும், லண்டனிலும், பாரிசிலும் உள்ள ஆட்சியாளர்கள் யூகோசலாவியாவின் வன்முறைத் துண்டாடல்கள் மூலம் தமது சொந்த மூலோபாய பொருளாதார நலன்களை முன்வைக்க முயல்கின்றன.

திரும்பத் திரும்ப அதன் சக்தியையும் போர்க் குணத்தையும் வெளிப்படுத்திய யூகோசலாவியத் தொழிலாளர் வர்க்கம், கசப்பான முறையில் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மாஜி ஸ்டாலினிச அதிகாரிகளான சேர்பிய ஸ்லோபோடன் மிலோசேவிக்கும் குரோஷிய பிராந்சோ ருட்ஸ்மனும் சுலோவினிய மிலான் குகனும் பொஸ்னிய அலிஜா இசட்பெகோவிக் போன்ற இனவாத அரசியல்வாதிகளுடன் இனவாத தேசிய வெறிஎ்ய அனல் பறக்கச் செய்ய சேர்ந்து கொண்டுள்ளனர். அவர்களின் நோக்கம் அதிகாரத்துவத்தின் சொந்த முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையால் சிருஷ்டிக்கப்பட்ட ஆழமாகிவரும் வறுமைக்கும் அதிகரித்துவரும் வேலையின்மைக்கும் எதிராக யூகோசலாவிய தொழிலாளர்கள் ஒரு ஒன்றுபட்ட போராட்டத்தினை நடாத்துவதைத் தடை செய்வதே.

மார்க்சிஸ்டுகள் இன்றைய சகதியில் இருந்து பால்கன் தொழிலாளர்கள் வெளியேறுவதற்கு உதவ ஒரு முன்னோக்கினை அபிவிருத்தி செய்தாக வேண்டும். யூகோசலாவிய தொழிலாளர்களின் பலம்வாய்ந்த அனைத்துலகவாத பாரம்பரியங்களுக்கு ஒரு விஞ்ஞான ரீதியான ஆய்வினதும் புரட்சிகர வேலைத்திட்டத்தினதும் அடிப்படையில் புத்துயிரூட்டப்பட வேண்டும்.

பொஸ்னியாவில் இடம்பெற்று வந்த அட்டூழியங்கள் பெல்கிரேட், சக்கிரேப் அல்லது சரஜீவோவின் பிரமாண்டமான தொழிலாளர்களின் ஆதரவினைக் கொண்டிருந்தது என நம்புவதற்கு எந்தவிதமான காரணமும் கிடையாது. அவர்களின் பழைய தலைமையின் காட்டிக் கொடுப்பும் அதன் விளைவாக உருவான குழப்பங்களும் அவர்களை—உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள தொழிலாளர்களுடன் சேர்த்து—ஒரு சுயாதீனமான அரசியல் பதிலீடு இல்லாத நிலைக்குத் தள்ளியது.

இருப்பினும் அத்தகைய ஒரு பதிலீடு இருந்து வருகின்றது. அதுதான் சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டம். முதலாளித்துவம் சிருஷ்டித்துள்ள நெருக்கடிக்கு அதனால் மட்டுமே ஒரு முற்போக்கான தீர்வினை வழங்க முடியும்.

### அனைத்துலக சிறப்பம்சம்

பால்கனில் இந்த முன்நோக்குக்கான போராட்டம் ஒரு பெரும் அனைத்துலக முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளது.

தென்கரையில் உள்ள முன்னாள் சோவியத் யூனியன் போட்டி தேசிய, இனக் குழுக்களுக்கு இடையேயான மோதுதல்களினால் சிதறுண்டு போயுள்ளது. ஜோர்ஜியா உள்நாட்டு யுத்தத்தினால் சிதறிப் போயுள்ளது. நாகர்னோ-கரவாக் மீதான ஆறு வருடகால போராட்டம் பல்லாயிரக்கணகான அசரிஸ், ஆர்மேனியர்களின் உயிர்களைப் பலி கொண்டுள்ளதோடு முடிவுக்கான அறிகுறியே தென்படவில்லை.

1948 பிரிவினையின் போது பிரமாண்டமான இரத்தக்களரியின் களமாக விளங்கிய இந்தியத் துணைக்கண்டத்தை மீண்டும் ஒரு தடவை இன,மத மோதுதல்கள் அச்சுறுத்தி வருகின்றன. அத்தோடு ஆபிரிக்காவில் கணக் குழுக்களுக்கு இடையேயான குரோதம் [illegible] மனிதப் படுகொலைகளை உருவாக்கி [illegible].

முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் கூட தேசிய வெறியும், இனவாதமும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. கனடாவில் பிரான்சிய, ஆங்கில மொழி பேசும் கனடியர்களிடையே பிரிவினைவாதம் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. ஐரோப்பா பூராவும் வெளிநாட்டவர்கள் மீதான தாக்குதல்களும் வெளிநாட்டவர் விரோதக் கூச்சல்களும் பரந்துள்ளது. அமெரிக்காவில் இரண்டு முதவாளித்துவக் கட்சிகளும் இனத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசியலை பகிரங்கமாகக் கடைப்பிடித்து வருகின்றன.

தேசிய, இன அல்லது மத வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் முதலாளித்துவத்தினால் ஒடுக்கப்பட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் ஒரு சக்திவாய்ந்த சோசலிசத் தொழிலாளர் வர்க்க இயக்கம் இல்லாது போயின், இந்தப் பூகோளத்தில் பொஸ்னியாவில் இடம்பெறுவது போன்ற மனிதப் படுகொலைகளின் பாணியிலான பேரழிவினுள் தள்ளப்படும் ஆபத்து இல்லாத மக்களே இருக்க முடியாது.

எனவேதான் முதலாளித்துவத்தினாலும் அதன் ஏஜன்டுகளாலும்—மாஜிஸ்டாலினிஸ்டுகள், குட்டி முதலாளித்துவ வாய்ப்பிரசங்கிகள்—பரப்பப்பட்டு வரும் தேசியவாத விஷத்துக்கு எதிராக ஈவிரக்கமின்றிப் போராடுவது நான்காம் அகிலத்தின் பணியாகும். இன்று அவர்கள் அனுபவித்துக் கொண்டுள்ள அட்டூழியம் நிறைந்த தாக்குதல்களின் பெறுபேறாக பிரமாண்டமான தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் புரட்சிகரப் பொறுப்பு மிகவும் தீர்க்கமானதால் அது பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் பதாகையை உயர்த்துவது நிச்சயம்.

கடந்த பல வருடங்களின் பயங்கரமான நிகழ்வுகள், ஏகாதிபத்தியத்துக்கு தம்மை அடிபணிந்து போகச் செய்தவர்களுக்கும் எதிர்வரும் புரட்சிகரப் போராட்டங்களுக்குத் தயார் செய்யும் பொருட்டு கசப்பான படிப்பினைகளை புரிந்து கொள்ள முயன்றவர்களுக்கும் இடையே ஒரு ஆதாளபாதாளத்தை சிருஷ்டித்துள்ளது.

இந்நிகழ்வுகளின் தாக்கத்தின் கீழ் கடந்த காலத்தில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினைச் சார்ந்திருந்த குட்டி முதலாளித்துவ இடதுசாரி தட்டுக்கள் தொடர்ந்தும் தமது அரசியல் மார்க்சிச கோட்பாட்டு மரபுகளை சார்ந்திருப்பதாகவோ அல்லது ஒரு வர்க்க நிலைப்பாட்டின் அடிப்படையிலான அரசியல் அணுகுமுறையை கடைப்பிடிப்பதாகவோ பாசாங்கு செய்ய முடியாது போய்விட்டது. இந்தப் போக்கின் ஒரு சிறப்பான கடைகெட்ட வெளிப்பாட்டினை பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சி (WRP) கடைப்பிடிக்கும் அரசியல் தொழிற்பாட்டினுள் கண்டுகொள்ள முடியும்.

தொழிலாளர் புரட்சிக் கட்சி—அதன் அரசியல் செயலாளர் கிளிவ் சுலோற்றரின் தலைமையில் கடந்த ஜூனில் பொஸ்னியாவுக்கான தொழிலாளர் உதவியை (Workers Aid for Bosnia) ஆரம்பித்தது. கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக தொ. பு. க.வின் பிரதான அரசியல் பணியாக விளங்கிய இந்த பிரச்சாரத்தின் பகட்டு நோக்கம், கிழக்கு பொஸ்னியாவின் ஒரு நகரமான டுஸ்லா வாசிகளுக்கு வைத்திய, உணவு உதவியை அனுப்பி வைப்பதே.

மனிதாபிமான உதவிப் புகைமண்டலத்தினதும் பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதத்துக்கான வாக்குவன்மை மிக்க அழைப்புக்களதும் பின்னணியில் சுலோற்றர் தொழிலாளர் உதவியை (Workers Aid) பொஸ்னியன் குரோஷியன் அரசாங்கங்களுடனும், ஏகாதிபத்தியச் சக்திகளுடனும் நேரடியான உறவுகள் மூலம் பால்கனில் முதலாளித்துவ தேசியவாதத்தினை ஊக்குவிக்கவும் நேரடியான ஆத்திரமூட்டல்களில் ஈடுபடவும் பயன்படுத்தியுள்ளார்.

தொ. பு. க.வின் பிரச்சார இயக்கத்தின் அரசியல் அடிப்படையானது (1) பொஸ்னிய ஜனாதிபதி இசட்பெகோவிக்கின் முதலாளித்துவ ஆட்சியை விமர்சனம் செய்ய சோசலிஸ்டுகளுக்கு உரிமை கிடையாது என்பதை வலியுறுத்துவது, (2) இனக் குழுக்களின் அடிப்படையிலான அரை டசின் குட்டி அரசுகளாக யூகோசலாவியா பிளவுண்டு போய்க் கிடப்பது பால்கன் மக்களின் தேசிய சுய நிர்ணயத்தினையுப், விடுதலையையும் வரலாற்று ரீதியில் அடைந்துள்ளதை பிரதிநிதித்துவம் செய்கின்றது என்ற வாதம்.

### பால்கன் மீதான பிரித்தானிய விவாதம்

தொ. பு. க. கொள்கைகளுக்கு ஒரு புறநிலை சமூக அடிப்படை உண்டு. இதைப் புரிந்து கொள்ள இந்தக் கொள்கைகள் தோன்றிய தேசிய அரசியல் அடிப்படையை ஆராய வேண்டியுள்ளது.

([illegible]ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுஸ்லாவுக்கான பாதை:- சுலோற்றரின் தொழிலாளர் ஏகாதிபத்தியத்துக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பிரித்தானிய முதலாளி வர்க்கம் அதன் பால்கன் மூலோபாயத்தினை ஆழமாக விவாதித்து வந்தது. ஆரம்பத்தில் பிரித்தானிய டோரி அரசாங்கம் யூகோசலாவியாவைத் துண்டாடுவதை எதிர்த்தது. இது 1991ல் சுலோவீனிய, குரோஷிய குடியரசுகளின் சுதந்திரப் பிரகடனங்களுடன் ஆரம்பமாகியதோடு ஜேர்மனி இவற்றுக்கு அங்கீகாரம் வழங்க விரைந்தது.

பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகத்தினுள் இன்றுள்ள கன்னை, லண்டனின் பழைய சேர்பியன் கூட்டு ஒரு கணிசமான அளவு உறுதிப்பாட்டையும் பிரித்தானிய செல்வாக்கின் சிறந்த வாகனமாகவும் விளங்குவதைக் கண்டனர். இது குரோஷியன் தேசியவாதத்துக்குத் தனது ஆதரவினை வழங்குவதை உள்ளடக்கிய ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் ஆவல்களை பால்கனில் எதிர்த்து நிற்பதை இலக்காகக் கொண்ட கொள்கையாக விளங்கியது.

எவ்வாறெனினும் இப்பிராந்தியம் தொடர்ச்சியாக சிதறுண்டு போனதைத் தொடர்ந்து பிரித்தானிய ஆளும் வர்க்கத்தின் உள்ளேயான மூலகங்கள், லண்டன் சேர்பியாவுடனான உறவுகளை முறித்துக் கொண்டு, இராணுவ ஆரம்பிப்பில் இறங்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பின.

பால்கன் மூலோபாயம் மீதான மோதுதல்கள் பெரிதும் கணிசமான அளவிலான வேறுபாடுகளாக வெளிப்பட்டதோடு, அவை டோரி, தொழிற் கட்சிகள் இரண்டையும் சமீப காலங்களில் பிளவுபடச் செய்தது. முழு ஆளும் வர்க்கத்தினுள்ளேயும் ஐரோப்பிய யூனியனுள் இணைந்து கொள்வதன் மூலமும் குறிப்பாக கண்டத்தில் ஜேர்மனியின் பொருளாதார மேலாதிக்கம் காரணமாகவும் ''பிரித்தானிய நலன்கள்'' ஆபத்துக்கு உள்ளாகலாம் என்ற கணிசமான அளவு அச்சம் இருந்து கொண்டுள்ளது. பிரித்தானிய இராணுவ பலத்தினை மிகவும் பலம் வாய்ந்த முறையில் பயன்படுத்துவதனை ஜேர்மன் மூலதனத்துக்கான தனது பொருளாதார தாழ் நிலைக்குச் சமம் செய்வதற்கான ஒரு கருவியாக முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினர் காண்கின்றனர்.

இந்த விவாதத்தில் வாதிடும் பக்கங்கள் கட்சி நிலைப்பாடுகளைத் தாண்டிச் சென்றுள்ளன. சேர்பியாவுக்கு எதிரான இராணுவத் தலையீட்டுக்கு அழைப்பு விடுப்பதில் தொழிற் கட்சி 'இடது' பிரித்தானிய 'இரும்புப் பெண்' மார்க்கிரட் தட்ச்சருடன் இணைந்து கொண்டுள்ளது.

பொஸ்னியாவுக்கான தொழிலாளர் உதவி, பிரித்தானிய முதலாளி வர்க்கத்தின் உள்ளே இந்த சேர்பியன் எதிர்ப்புக் கும்பலின் உத்தியோகபூர்வமான இடதுசாரி கன்னையாகத் தோன்றியுள்ளது. இது பொஸ்னியன், குரோஷியன் ஆட்சியாளர்களின் பகிரங்கமான ஆதரவைக் கொண்டுள்ளது. ஒரு தொகை தொழிற் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வமான அங்கீகரிப்பையும் பிரித்தானிய தொழிற்சங்க காங்கிரசின் (TUC) பொதுச் செயலாளர் ஜோன் மங்ஸ், தலைவர் அலன் டுபின் ஆகியோரின் பின்னணி ஆதரவையும் பெற்றுள்ளது.

சேர்பியா மீதான விமானக் குண்டுவீச்சு வாதத்தினை முன்வைத்த முதலாவது பிரித்தானிய அரசியல்வாதியான மாஜி-தொழிற் கட்சித் தலைவர் மைக்கேல் பூட், தொ. பு. க. தூதுக் குழுவை ஐரோப்பாவினுள் வழியனுப்பி வைக்கும் செப்டம்பர் கூட்டத்தில் முக்கிய பேச்சாளராக இடம் பிடித்துக் சொண்டார்.


பிரித்தானிய ஆளும் வட்டாரங்களிலும், சக்ரேப், சரஜீவோ முதலாளித்துவ ஆட்சியாளர்களிடமிருந்தும் தொழிலாளர் உதவி வெற்றி கொண்ட ஆர்வம் நிறைந்த ஆதரவானது இப்பிரச்சாரத்தின் அடிநாதமாக உள்ள அரசியலின் ஒரு அளவீடாகும். டுஸ்லாவுக்கான தொ. பு. க. தூதுக்குழு, சோசலிசத்தினை அடியோடு நிராகரித்துவிட்டு முதலாளித்துவ தேசியவாதத்தினை பகிரங்கமாக அரவணைத்துக் கொண்டதன் மூலம் சித்தாந்த ரீதியில் தயார் செய்யப்பட்டதாகும்.

## ஒரு 'அடிப்படை உண்மை'

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் தேசிய சோசலிசத்தின் விஷம் பால்கனை மிகவும் கொடூரமான போராட்டங்களால் சூழப்பட்டுள்ள ஒரு நிலைமையில் தொழிலாளர் புரட்சிக் கட்சி இப் பிராந்தியத்தில் தேசியவாதம் இயற்கையாகவே முற்போக்கான ஒரு பாத்திரத்தினை ஆற்ற வேண்டியுள்ளது என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது.

'வேர்க்கர்ஸ் பிரெஸ்' அதனது 1993 ஜூலை 31ம் திகதிய ஆசிரியத் தலையங்கத்தில் பிரகடனம் செய்ததாவது: ''யுத்தம் ஒரு அடிப்படையான உண்மையினால் குணாம்சப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் யுத்தம். சேர்பியா ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு-பொஸ்னிய ஹேர்ஷகோவினாவுக்கு எதிராக உள்ளது. ...பொஸ்னியாவின் சுயநிர்ணயத்துக்கான உரிமையை காப்பதும் ஒடுக்குவோனுக்கு எதிராக ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் உரிமையை காப்பதும் சோசலிஸ்டுகளின் கடமை... அங்கும் தேசியவாதம் இருப்பதால் இங்கும் தேசியவாதம். மாபெரும் சேர்பியாவின் தேசிய வாதம் இருப்பதால் அதன் சொந்த விவகாரங்களை நிர்ணயம் செய்யும் உரிமைக்கான பொஸ்னிய போராட்டம் இருந்து வருகின்றது.''

''ஒடுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள்'', 'சுயநிர்ணயம்' போன்ற பதங்களை அவற்றின் வரலாற்று அடிப்படையில் இருந்து உரித்தெடுத்து பொஸ்னியாவில் இஸட்பெகோவிக் முதலாளித்துவ ஆட்சியின் பின்னால் தொ. பு. க. அணிதிரள்வதை நியாயப்படுத்த சுலோற்றர் முயற்சிக்கிறார்.



பேர்ளின் காங்கிரஸ், 1878:— 1876ல் ருஷ்யா ஓட்டோமன் படையை வெற்றிகண்டு, சான் ஸ்ரீபன் உடன்படிக்கை மூலம் தனது நிபந்தனைகளை பால்கனில் திணித்தது. பிரித்தானியா, ஜேர்மனியும் ஹப்ஸ்பேர்க் முடியரசும் இப்பிராந்தியத்தினை மீளப் பங்கீடுசெய்ய பேர்ளின் காங்கிரசை ஏற்பாடு செய்தன.

---

சுலோற்றர் இப்பதங்களை மார்க்சிச அகராதியில் இருந்தன்றி அறநெறி லிபரல்வாதிகளின் அரசியல் அலட்டல் அகராதியில் இருந்து கடன் எடுத்துள்ளார். அவை தீய சேர்பியாவின் மீதான பொதுக் குரோதத்தினையும் கற்புள்ள பொஸ்னியாவுக்கான அனுதாபத்தினையும் வெளிக்காட்டுவதைக் குறிக்கின்றது.

இந்நூற்றாண்டின் முதல் பாகத்தின் பால்கன் யுத்தத்தின் போது எழுதுகையில் லியொன் ட்றொட்ஸ்கி எழுதியதாவது: ''தனிப்பட்ட வாழ்க்கையில் போலவே அரசியலிலும் அறநெறியைக் காட்டிலும் உதவாக்கரையானது வேறொன்றும் இல்லை. மலிவானதும் பெரிதும் பயனற்றதும் வேறொன்றும் இல்லை. எவ்வாறெனினும் பல மக்கள் இதனைக் கவர்ச்சிகரமானதாகக் காண்கின்றனர். ஏனெனில் இது நிகழ்வுகளின் புறநிலைப் பொறிமுறைகளுள் பார்வையைச் செலுத்துவதில் இருந்து அவர்களைக் காக்கின்றது.'' (பால்கன் யுத்தங்கள், லியொன் ட்றொட்ஸ்கி, நியூயோக் மொனாட் பிரெஸ்-1980 பக்.9)

சுலோற்றருக்கும், தொ.பு.க.வுக்கும் இந்த ''நிகழ்வுகளின் புறநிலைப் பொறிமுறை''யை ஆய்வு செய்வதில் எது விதமான அக்கறையும் கிடையாது. ஏனெனில் அவர்கள் தொழிலாளர் வர்க்கத்துக்கென ஒரு சுயாதீனமான கொள்கையை விவரிப்பதாக இல்லை. முன்னாள் யூகோசலாவியாவில் அவர்களின் பாத்திரம் முதலாளித்துவ தேசியப் பிரிவினைவாதத்துக்குக் கைகொடுப்பதாயும் ஏகாதிபத்தியத் தலையீட்டுக்குத் துணைபோவதாயும் உள்ளது.

## தேசிய சுயநிர்ணயம்

முன்னாள் யூகோசலாவியா அல்லது பொதுவில் தேசியவாதப் பிரச்சினை தொடர்பாக அதன் அரசியலை மார்க்சிச இயக்கத்தின் வரலாற்று நிலைப்பாடுகளுடன் சமப்படுத்திக் கொள்ளவும் கூட தொ. பு. க. தவறியமை அதன் அரசியல் தலையீட்டின் மிகவும் தெளிவான தன்மையாகும்.

சுலோற்றர் பொஸ்னியன் பிரச்சினையை முக்கியமாக நியூயோர்க் டைம்சின் ஆசிரியத் தலையங்கப் பக்கங்களில் குறிப்பிடப்படும் அதே வார்த்தைகளில் வாதிடுகின்றார்.

மார்க்சிச விவாதத்தின் வளம்ப
காரங்களில் ஒரு மூடிய புத்தக

பொஸ்னியாவின் ''சுயநிர்
பிரார்த்தனையை லெனின்,
ளால் புனிதம் செய்யப்பட்டு
பட்ட சட்டமாக உள்ளங்கை
அவர் முயற்சிக்கின்றார். இதை
தமக்கு முந்திய எண்ணற்ற
கள், ஸ்டாலினிச அதிகாரத்து
துவ வாய்ப்பிரசங்கிகளில் இரு
மேலும் சுலோற்றர் இச்சுலோ
ஆய்வுக் கட்டுரைகளை வ
ஆண்டுகளில் உலகப் பொருள
எந்தவிதமான குறிப்பிடத்தக்க
வில்லை என்ற ரீதியிலேயே

லெனின் இந்த சுயநிர்ண
காலவரையறையற்ற அடிப்படை
தாக அல்லாது ஒரு திட்டவட்
கினை மனதில் கொண்டே
தொழிலாளர் வர்க்கத்தின
மீதான தேசியவாத செல்
போராடிக் காலவதியான மு
ளைக் கொண்ட ஆட்சிகளின்
பண்புகளை தகர்த்து எறிவ

இந்த விவகாரத்தில்
வாத அணுகுமுறை அவர் உ
நிர்ணயம் தொடர்பாக மூன்
பிரித்ததில் இருந்து சுட்டிக்கா

முதலாவது வகையில் அ
முன்னேறிய முதலாளித்துவ ந
ரிக்க அரசுகளையும் சேர்த்
போக்கு முதலாளித்துவத் தே
காலத்துக்கு முன்னரே ஒரு

''இரண்டாவது'', லெனி
வது: ''கிழக்கு ஐரோப்பா:
கள், குறிப்பாக ருஷ்யா. இங்
சிறப்பாக முதலாளித்துவ-ஜன
கங்களை அபிவிருத்தி செய்த
டங்களையும் உக்கிரம் அடை
பாட்டாளி வர்க்கத்தின் பணி
நாயக சீர்திருத்தங்களைப்
ஏனைய நாடுகளில் சோசலிச
குவதும்-தேசிய இனங்களின் சு
னணியில் நில்லாது அமுலாகா

''மூன்றாவதாக சீனா, பே
சகல காலனிகளும். இவை சு
சனத்தொகையைக் கொண்
முதலாளித்துவ-ஜனநாயக இ
ஆரம்பமாகியுள்ளன அல்லது
போக வேண்டியுள்ளது. சோ
நிபந்தனையின்றியும் காலனிக
செய்யும்படி கோரவேண்டு
கோரிக்கை அதன் அரசியல்
னையும் அன்றி சுயநிர்ணய
னையே குறிக்கின்றது. அத்தே
உள்ள தேசிய விடுதலைக்கான
இயக்கங்களில் உள்ள பெரிது
களுக்கு உறுதியான ஆதரவின
றின் கிளர்ச்சி எழுச்சி அல்லது
றில் ஏதாவதொன்றில் அவற்
யச் சக்திக்கு எதிராக உதவுகி
டிய நூல் தொகுப்பு (மாஸ்
1970) தொகுப்பு 22-பக்கம் 1

லெனினால் இரண்டாம்,
டிலும் உள்ளடக்கப்பட்ட நா
பரிணாமங்கள் இடம் பெற்று
இரண்டும் பிரமாண்டமான
களையும் சமூக உறவுகளையு
இன்றைய சகாப்தத்தில் இந்
நிலைமையை 1915ல் இருந்து
யான விதத்தில் ஒப்பிட முடி

மனித இனத்தின் பிரமா
னித்துவ ஆட்சியின் கீழ் வா
உலகத்தை லெனின் வருணி
ரிக்காவினதும் வெகுஜனங்க
வாத இயக்கங்களது எழுச்சி
அனுபவத்தையும் கடந்து
லாற்று நிகழ்வு ஏற்கனவே
வழங்கியுள்ளது. உலகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர் புரட்சிக் கட்சி பால்கனில் ... உதவுவது எப்படி?

...வளம்மிக்க வரலாறு இந்த விவ
... புத்தகமாக உள்ளது.

...சுயநிர்ணய உரிமை''க்கான தனது
...யின், ட்ரொட்ஸ்கியின் ஆக்கங்க
...பட்டு நீண்டகாலமாக மதிக்கப்
...ளங்கைக்குள் மறைத்துக்கொள்ள
... இதைப் பொறுத்தமட்டில் அவர்
...ற்ற முதலாளித்துவ தேசியவாதி
...ாரத்துவங்கள், குட்டிமுதலாளித்
...ல் இருந்து வேறுபட்டவர் அல்ல.
... சுலோகத்தினை லெனின் இந்த
... வரைந்ததன் பின்னரான 80
...பொருளாதாரத்திலும் அரசியலிலும்
...த்தக்க மாற்றமும் ஏற்பட்டுவிட
...யே கையாள்கிறார்.

...நிர்ணய உரிமையை ஏதோவொரு
...ப்படைக் கொள்கையைப் பேணுவ
...ட்டவட்டமான வரலாற்று இலக்
...ாடே பேணினார். அதாவது,
...த்தினதும் ஒடுக்கப்படும் மக்கள்
... செல்வாக்குகளை எதிர்த்துப்
...ன முதலாளித்துவ அபிவிருத்திக
...ளின் இனக்குழு, மொழித் தடைப்
...றிவதே.

...ல் [illegible]னின் வரலாற்றுச் சட
...ர் உலகினை 'தேசங்களின் சுய
... மூன்று வகையான நாடுகளாக''
...டிக்காட்டப்படுகின்றது.

...ல் அவர் மேற்கு ஐரோப்பாவின்
...துவ நாடுகளையும் ஐக்கிய அமெ
...சேர்த்தார்: இந்நாடுகளில் முற்
...த் தேசியவாத இயக்கம் நீண்ட
... ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.
... லெனின் தொடர்ந்து கூறியதா
...பா: ஆஸ்திரியா, பால்கன் நாடு
.... இங்கு இருபதாம் நூற்றாண்டே
...வ-ஜனநாயக தேசியவாத இயக்
...செய்ததோடு தேசியப் போராட்
...அடையச் செய்தது. இந்நாடுகளில்
... பணி-தமது முதலாளித்துவ-ஜன
...ளைப் பூரணத்துவம் செய்வதும்
...சலிசப் புரட்சிக்கு உதவி வழங்
...ளின் சுயநிர்ணய உரிமைக்கு முன்
...லாகாது.

...ா, பேர்சியா, துருக்கியும் மற்றும்
...வை கூட்டாக 1,000 மில்லியன்
...காண்டுள்ளன. இந்த நாடுகளில்
...க இயக்கங்கள் ஒன்றில் அரிதாக
...அல்லது இன்னமும் நீண்டதூரம்
... சோசலிஸ்டுகள் நஷ்டஈடின்றியும்
...லனிகளை உடனடியாக விடுதலை
...வண்டும். அத்தோடு இந்தக்
...யல் வெளிப்பாட்டில் வேறெத
...ணய உரிமைக்கான அங்கீகாரத்தி
...அத்தோடு அவை இந்நாடுகளில்
...க்கான முதலாளித்துவ-ஜனநாயக
...பெரிதும் புரட்சிகரமான மூலகங்
...ரவினை வழங்குவதோடு அவற்
...அல்லது புரட்சிகர யுத்தம்—இவற்
...அவற்றை ஒடுக்கும் ஏகாதிபத்தி
...தவுகின்றது'' (லெனின் திரட்
...மாஸ்கோ புறோகிரஸ் பப்ளிசர்ஸ்,
...கம் 150-52)

...டாம், மூன்றாம் வகை இரண்
...— நாடுகளில் பாரிய அளவிலான
...பற்றுள்ளன. ருஷ்யா, பால்கன்ஸ்
...ான புரட்சிகர கொந்தளிப்புக்
...ளையும் கடந்து சென்றுள்ளது.
... இந்த நாடுகளில் இருந்துவரும்
...ருந்து வந்ததுடன் பொறிமுறை
... முடியாது.

...ரமாண்டமானோர் நேரடிக் கால
... வாழ்ந்து கொண்டிருந்த ஒரு
...ணித்தார். ஆசியாவினதும் ஆபி
...ங்கள் முதலாளித்துவத் தேசிய
...ழச்சியையும் காலனிகள் ஒழிப்பு,
...ந்து சென்றுள்ளனர். இந்த வர
...வே முடிவான அத்தாட்சிகளை
... டுக்கப்படும் மக்கள் தேசிய

முதலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் புதிய தேசிய அரசுகளை நிறுவுவதன் ஊடாக விடுதலையை அடைய முடியாது.

## தேசிய ஒன்றிணைப்பு

ஆனால் அக்காலத்திலும் கூட லெனின் தேசியப் பிரிவினைவாதத்தின் வீரன் அல்ல. அவர் தனது கருத்துக்களை 1912-13 பால்கன் யுத்தங்களின் நிழலில் அபிவிருத்தி செய்ததோடு, தேசியப் பிளவுகளின் தூண்டுதலின் ஊடாக அப்பிராந்தியத்தினை ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப்படுத்தியதன் கசப்பான படிப்பினைகளை உள்ளீர்த்துக் கொண்டார்.

லெனின் பால்கனில் தேசிய சுயநிர்ணயத்தினை பிராந்திய சனத்தொகையினை ஒரு சமஷ்டி குடியரசில் ஐக்கியப்படுத்தும் பிரச்சினையாகவும் அது ஏகாதிபத்தியத்தினால் சூழ்ச்சி செய்யப்பட்ட குட்டி அரசுகளின் பொருளாதார ரீதியில் பகுத்தறிவற்ற எல்லைகளைக் கிழித்து எறியும் எனவும் கண்டார். அவரின் முன்னோக்கு இன்று தொ. பு. க.வினால் ஊக்குவிக்கப்படும் சோவினிச வகையறாவுக்கு நேர் எதிரானது.

1915ல் அவரினால் எழுதப்பட்ட 'சோசலிசமும் யுத்தமும்' என்ற சிறு பிரசுரத்தில் லெனின் விளக்கியதாவது: ''குட்டி அரசுகளை அமைப்பதை ஊக்குவிப்பதைக் காட்டிலும் இந்த உரிமைக்காக முன்னின்று போராடுவது அதற்கு மாறாக சுதந்திரமானதும் அச்சமற்றதும் ஆதலால் பரந்ததும் பெரும் அரசுகளையும் அரசுகளின் சமஷ்டியினையும் பெரிதும் உலகளாவிய ரீதியில் அமைக்க இட்டுச் செல்கின்றது. அவை பெரிதும் வெகுஜனங்களின் நலனுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அமைவாக விளங்கும்.'' (லெனின் திரட்டிய நூற்தொகுதி (மாஸ்கோ புறோகிரஸ் பப்ளிசர்ஸ் 1970) தொகுதி-21 பக்கம் 298)

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் தோன்றிய தேசிய இயக்கங்கள் வரலாற்று ரீதியில் முற்போக்கான பணியை எதிர்கொண்டன. முதலாளித்துவ வர்க்கத் தலைமையின் கீழ் யதார்த்தமாக மாட்டாத வேறுபட்ட மொழிக் குழுக்களை ஐக்கியப்படுத்தவும் ஏகாதிபத்தியம் கடைப்பிடித்த நிலமானித்துவப் பிளவுகளைத் தூக்கி வீசவும் வேண்டியிருந்தது.



1913ம் ஆண்டின் பால்கன் யுத்தத்தினைத் தொடர்ந்து துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் இடையேயான தற்காலிக யுத்தநிறுத்தம்:— 1912–13 பால்கன் யுத்தத்தில் சேர்பியன் ஆட்சியாளர்களின் யுத்த இலக்குகளை சேர்பியன் சமூக ஜனநாயகக் கட்சி எதிர்த்தது. ஒட்டோமன் ஆட்சியில் இருந்து பால்கனை விடுதலை செய்யும் சில முற்போக்கு உள்ளடக்கத்தினைப் போராட்டம் கொண்டிருந்த போதிலும் சேர்பியன் சோசலிஸ்டுகள் ஆளும் வர்க்கத்தின் கொள்ளைக்கார யுத்த இலக்குகளில் நம்பிக்கை வைக்கவில்லை.

---

லெனின் தேசிய இனங்களின் [illegible] சுலோகத்தினை முன்வைத்த [illegible] கங்களின் இந்த முற்போக்கு, ஒன்றிணைக்கும் பண்பு ஒரு ஆழமான பொருளாதார உள்ளீட்டைக் கொண்டிருந்தது.

''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை''யில் லெனின் முதலாளித்துவத்தின் அபிவிருத்தியில் அத்தகைய இயக்கங்களின் புறநிலை உந்துதலை விளக்கினார்: ''உலகம் பூராவும் நிலமானித்துவத்தின் மீதான முதலாளித்துவத்தின் இறுதி வெற்றிக் காலப்பகுதி தேசிய இயக்கங்களுடன் இணைந்துள்ளது. கண்டங்களின் உற்பத்தியின் பூரண வெற்றிக்கு முதலாளித்துவ வர்க்கம் உள்நாட்டுச் சந்தையைக் கைப்பற்ற வேண்டும், தனியொரு மொழி பேசும் சனத்தொகையைக் கொண்ட அரசியல் ரீதியில் ஐக்கியப்படுத்தப்பட்ட பிராந்தியங்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த மொழியின் அபிவிருத்திக்கும் பலமான இயக்கத்துக்குமான சகல தடைகளும் நீக்கப்பட வேண்டும்.''

அவர் மேலும் கூறியதாவது: ''ஆதலால் ஒவ்வொரு தேசிய இயக்கத்தினதும் போக்கானது நவீன முதலாளித்துவத்தின் இந்தத் தேவைகள் நன்கு திருப்தி செய்யப்படும் தேசிய அரசுகளை நிறுவும் திசையிலானதாக உள்ளது-'' அவர் குறிப்பிடும் வகையிலான அரசு இனக்குழு பிரிவினையினை (Ethnic Separatism) அடிப்படையாகக் கொண்டது அல்ல என்பது தெளிவு.

(இதே நூல் பக்கம் 396)

## புதிய தேசியவாதம்

அரசியலில் ஒரு காலப் பகுதியில் ஒரு திட்டவட்டமான சமூக, வர்க்க உள்ளடக்கத்தினைக் கொண்டிருந்த பதங்கள் அடுத்துவரும் காலப்பகுதியில் பெரிதும் வேறுபட்டதை அடிக்கடி பிரதிநிதித்துவம் செய்வது உண்டு. ''சுயநிர்ணயம்'' சுலோகத்தைப் பொறுத்தமட்டிலும் இது பொருந்தும்.

உலகப் பொருளாதார, அரசியல் உறவுகளிலான பரந்த அளவிலான மாற்றங்கள் தேசிய இயக்கங்களின் பண்பிலும் தொடர்ச்சியான மாற்றங்களைச் சிருஷ்டித்துள்ளன. சுலோற்றரும் அவரின் தொழிலாளர் புரட்சிக் கட்சியும் இந்த வரலாற்றுப் பரிணாமங்களில் எதுவுமே இடம்பெறவில்லை என்ற கோதாவில் முன்னேறுகின்றன.

இனக்குழு சோவினிசத்தின் மறுமலர்ச்சி பால்கனில் அல்லது அதே விடயத்தினைப் பொறுத்தமட்டில் முன்னைய சோவியத் யூனியனில் அல்லது இந்தியத் துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியத்தின் மரபுரிமைகளுக்கும் நிலமானித்துவ ஆளுமைக்கும் ஒரு முடிவுகட்ட எடுக்கும் முயற்சியைக் குறித்து நிற்கின்றது என தீர்க்கமான முறையில் வாதிட முடியுமா? இன்று ஒருவர் பொஸ்னிய அல்லது கஸாகிஸ்தான் அல்லது காஷ்மீர் தேசிய முதலாளி வர்க்கம் 'உள்நாட்டுச் சந்தையைக் கைப்பற்ற'வும் அதன் மூலம் ''பண்ட உற்பத்தியின் வெற்றி''க்கும் அதனூடாக வர்க்கப் போராட்டத்தின் பூரணமான அபிவிருத்திக்குமான நிலைமைகளைச் சிருஷ்டிக்க முயல்வதாயும் பேச முடியுமா?

மாறாக இந்தப் புதிய இனக்குழுவெறி இயக்கங்கள் இன்றுள்ள அரசுகளைப் பால்கன்மயமாக்க முயற்சிக்கின்றன. ஒரு உள்நாட்டுச் சந்தையை உருவாக்கப் பிரேரிப்பதற்குப் பதிலாக அவை ஏகாதிபத்தியத்துடனும் உலகளாவிய அசையும் மூலதனத்துடனும் பெரிதும் நேரடியான பொருளாதாரப் பந்தங்களை விரும்புகின்றன. ''சுயநிர்ணய உரிமை'' உள்ளூர் முதலாளி வர்க்கத்தின் சிறிய பிரிவினரின் நலன்களை முன்வைப்பதற்கான ஒரு சாதனமாகவே அழைக்கப்பட்டுள்ளது.

முன்னைய காலனித்துவ நாடுகளில் இந்த சோவினிசப் போக்கில் பல, பழைய முதலாளித்துவத் தேசியவாத இயக்கங்களின் கப்பல் சிதைவில் இருந்து கடலில் தள்ளப்பட்டு மிதக்கும் மிச்சசொச்ச போக்குகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. காலனித்துவ ஒழிப்பின் ஆரம்பகாலத்தின் போது முன்வைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி மூலோபாயத்தினைக் கைவிட்டுவிட்டு, போட்டி முதலாளித்துவக் கும்பல்கள் தேசிய பிரிவினைவாதப் பிரச்சாரத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பெரிதும் வாய்ப்பான முறையில் விநியோகிக்க முயல்கின்றன.

கிழக்கு ஐரோப்பாவிலும் குறிப்பாக முன்னாள் சோவியத் யூனியனிலும் தேசியவாதம் நேரடி ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும் முதலாளித்துவச் சொத்து உறவுகளையும் புனருத்தாரணம் செய்ய முயலும் அஸ்தமிக்கும் போக்குகளின் ஒரு பாகமாகவே இன்று தோன்றுகின்றது.

யூகோசலாவியாவில் இது குரோஷியாவிலும், சுலோவினியாவிலும் தலைநீட்டி வந்த முதலாளி வர்க்கம்—இக்குடியரசுகள் நாட்டின் ஏனைய பகுதியைக் காட்டிலும் பெருமளவிலான செல்வங்களை உள்ளடக்கி அனுபவித்து வந்தன—தம்மை வறிய பிராந்தியங்களில் இருந்து துண்டித்துக் கொண்டு, முதலாளித்துவ உலகச் சந்தையுடனான அவற்றின் சொந்த உறவுகளை இணைத்துக் கொள்ளும் முயற்சியோடு ஆரம்பமாகியது.

இதையொத்த உருவிலான பிரிவினைவாதம் இத்தாலியிலும் கூடத் தோன்றியுள்ளது. அங்கு லொம்பாட் லீக், செல்வம் நிறைந்த வடபகுதியினை பெரிதும் பின்தங்கிய வறியதுமான தெற்கில் இருந்து பிரிக்கப் போராடும் ஒரு இயக்கமாகத் தோன்றியுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுஸ்லாவுக்கான பாதை:— சுலோட்டரின் தொழிலாளர் புரட்சிக்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சுயநிர்ணயம்—லெனின் தொடக்கத்தில் கருதிய ஜனநாயக, முற்போக்கு உள்ளடக்கத்தினை இச்சுலோகம் தன்னகத்தே கொண்டிருக்கும்வரை-சகல வடிவிலான தேசிய ஒடுக்குமுறைகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதைக் கருதுகின்றது. இந்த இலக்கினை இன்றைய காலப் பகுதியில் யூகோசலாவியாவை அல்லது எந்தவொரு நாட்டினையும் இனக்குழுக்களின் அடிப்படையிலான ஒரு தொகை அரசுகளாக பிரிப்பதன் ஊடாக அடைய முடியாது.

அத்தகைய அரசுகள் அவை சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னர் இருந்துவந்த பொருளாதார, சமூக ஒடுக்கு முறையின் வடிவங்களை மீள உருவாக்கி, உக்கிரமாக்கும் ஏகாதிபத்திய சக்திகளின் பாதுகாப்புக்கு உட்பட்ட வலயமாகவும் அரைக் காலனிகளாகவும் இருப்பதை தவிர வேறொன்றாகவும் விளங்கமுடியாது என்பதை நிகழ்வுகள் பிரத்தியட்சமாக்கியுள்ளன.

தமது அரசியல் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் மார்க்சிஸ்டுகள் தாம் முன்வைக்கும் கொள்கைகளின் தாக்கங்களை ஒன்று அல்லது மற்றைய உடனடி தற்செயல் நிகழ்வின் தொடர்பின் அடிப்படையில் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் அபிவிருத்தி கண்டுவரும் போராட்டத்தின் அடிப்படையில் கணக்கிலெடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

எவ்வாறெனினும் சுலோற்றரும் தொழிலாளர் புரட்சிக் கட்சியும் தமது 'சுயநிர்ணய' சுலோகத்தின் உலகளாவிய தாக்கங்களையிட்டு ஒருபோதும் தம்மை அலட்டிக் கொண்டது கிடையாது. அவர்கள் ஒருபோதுமே சேர்பியர்களின் அட்டூழியங்கள் பற்றிய பொறுக்கியெடுக்கப்பட்ட கொடுமைகளினதும் பொஸ்னியாவிலான பூர்த்தி கண்ட உண்மைகளதும் ஒரு வெளிப்பாட்டுக்கும் மேலாகச் சென்றது கிடையாது. பால்கன் தொடர்பாக அவர்கள் கடைப்பிடிக்கும் நிலைப்பாடுகளுக்கும் ஒரு தொகை ஏனைய பிரச்சினைகளுக்கும் இடையே உறவு இருப்பதாக அவர்கள் கருதியது கிடையாது.

எல்லாவற்றுக்கும் மேலாக மார்க்சிச இயக்கம் 1947ல் இனக்குழு, மத போக்குகளின் அடிப்படையில் இந்திய, பாகிஸ்தானிய பிரிவினையை எதிர்த்ததோடு சோவினிச வாய்ப்பிரசங்கங்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தினை ஐக்கியப்படுத்தவும் போராடியது. மீண்டும் ஒரு தடவை இந்தியா துண்டாடப்படும் ஆபத்துக்கு முகம் கொடுத்துள்ளது. முன்னைய தகவமைவு செல்லுபடியற்றதா? பொஸ்னியாவிலான தொ. பு. க. நிலைப்பாட்டின் அடிப்படையில் நாம் பிரிவினைவாதம் காஷ்மீரிலும் பஞ்சாபிலும் அல்லது வடமேற்கிலும் வரலாற்று ரீதியில் முற்போக்கானது என ஏற்றுக்கொள்ளக் கூடாதா?

நாகொர்னா-கரபாக்குக்கான போராட்டத்தில் தொ. பு. க. சார்ந்து நிற்பது அசேரிஸ் உடனா அல்லது ஆர்மேனியருடனா? ஆபிரிக்காவிலான எண்ணிலடங்கா பிராந்திய, கணக்குழு மோதல்களில் நிலைமை என்ன? அல்லது அதே பிரச்சினைக்காக 'சுய நிர்ணய' கோரிக்கையை ஏகாதிபத்திய நாடுகளில் முன்வைத்த புளொக் குவிபெக், லொம்பாட் லீக், ஸ்கொட்டிஸ் நஷனல் கட்சி அல்லது அமெரிக்காவில் கறுப்பு தேசிய இனத்தவர்கள் போன்ற முதலாளித்துவக் கட்சிகள் தொடர்பான நிலைமை என்ன?

சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) உள்ளான குட்டி முதலாளித்துவ எதிர்ப்புக்கு எதிரான தமது போராட்டத்தில் ட்றொட்ஸ்கி ''ஸ்தூலமான'' அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகக் கடைப்பிடித்த நிலைப்பாடுகளின் தாத்பரியங்கள் ஊடாக இங்ஙனம் சிந்திக்க மறுப்பது அத்தகைய வர்க்கப் போக்குக்களின் ஒரு அடிப்படைக் குணாம்சமாகும் என வருணித்தார்.

''எதிர்ப்புத் தலைவர்கள்...போலந்திலான எமது பணிகளை ஸ்பெயினிலான எமது அனுபவத்திலிருந்தும் பின்லாந்திலான எமது பணிகளில் இருந்து போலந்து மீதான எமது நிலைப்பாட்டையும் பிரிக்கின்றனர். வரலாறு ஒரு தொகை அசாதாரணமான உதாரணங்களாகப் பரிணாமம் செய்யப்படுகின்றது; அரசியல் ஒரு தொகை கையில் அகப்பட்டதைக் கொண்டு செய்யும் ஒரு தொகை தயாரிப்பாகின்றது. நாம் இங்கு வார்த்தையின் முழு அர்த்தத்தில் மார்க்சிசத்தின் இடிபாடுகளும், கோட்பாட்டு சிந்தனையின் இடிபாடுகளும் அரசியலின் இடிபாடுகளும் அதனை நிர்ணயம் செய்யும் மூலகங்களாகியுள்ளதை காண்கின்றோம்.''

(மார்க்சிசம் காக்க லியொன் ட்றொட்ஸ்கி—பக்கம் 114)

சுயநிர்ணயத்துக்கான கோரிக்கையை தேசிய பிரிவினைவாதத்துக்கும் முதலாளி வர்க்க ஆட்சிக்கும் ஊடாக முன்வைப்போர் அத்தகைய சுலோகங்களின் உலகளாவிய விளைவுகளுக்குப் பொறுப்பாவர். இந்த 'உரிமை' ஏகாதிபத்தியச் சக்திகளால் உரிமை கொண்டாடப்படுவதோடு பால்கனின் ஏனைய பாகங்களிலும் உலகம் பூராவும் அவர்களின் இராணுவ பலத்தினால் ஆதரவளிக்கப்படும்.

இந்தச் சகல மோதுதல்களும் ஏகாதிபத்தியத்தினாலும் அதன் ஏஜன்சிகளாலும் சிருஷ்டிக்கப்பட்ட தேசிய பிரிவினை பிரச்சினைகளுக்கு சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தில் சகல தேசியஇன தொழிலாளர்களையும் ஐக்கியப்படுத்துவதற்கு வெளியே தீர்வு கிடையாது என்பதை குசுப்படுத்துகின்றன.

## சுலோற்றரும் ஹோரேயும்

சுலோற்றரின் பொஸ்னியன் தொடக்கிவைப்பில் ஒரு முக்கிய பாத்திரம் கேம்பிரிஜ் பல்கலைக் கழக மாணவனும் குரோஷியன் பின்னணியைக் கொண்டவருமான அட்டிலா ஹோரேயினால் வகிக்கப்பட்டுள்ளது. அவரின் தாயான பிரான்கா மகாஸ் ஸ்டாலினிசத்தினதும் குரோஷியன் தேசியவாதத்தினதும் அரசியல் பரிந்துரையாளனான ''The Destruction of Yogoslavia'' என்ற நூலின் ஆசானாவார். தொ. க. பு பிரச்சார இயக்கத்தில் இவனும் ஒரு பிரபல பாத்திரம் வகித்துள்ளார்.

இந்த 'தொழிலாளர் உதவி'யை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஹோரே தொ. பு. க.வுடனோ அல்லது தொழிலாளர் இயக்கத்துடனோ எந்தவிதமான தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. அந்தக் காலத்தில் இருந்து அவர் பால்கன் தொடர்பான கட்சியின் சர்ச்சைக்குரிய கட்டுரைகளில் பெரும்பகுதியை எழுதியுள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் நாம் எழுதிய ஒரு கட்டுரையில் சுலோற்றரை நாம் 'வேசியின் தலைமை கையாள்' என வருணித்து இருந்தோம். சிடுமூஞ்சி அல்லது ஒழுக்கங்கெட்ட மத்தியதர வர்க்கத் தீவிரவாதிகளிடையே சாத்தியமான கூட்டாளிகளையும் சகாக்களையும் மோப்பம் பிடிக்கும் தனது வல்லமையையிட்டு பெருமைப்படுபவன். ஹோரேயிடம் அவர் அத்தகைய ஒரு வேசிக் கையாள் மனிதனையே கண்டுள்ளார். இங்கு அவர் ஒரு குரோஷியன் தேசியவாதியின் மாகாணப் பின்னடைவினை கேம்பிரிஜ் பல்கலைகழக உயர்தர வர்க்க கர்வத்துடன் கலப்பதனை நிர்வகிக்கின்றார்.

அத்தகைய ஒரு பேச்சாளரைத் தெரிவு செய்தமை தொ. பு. க. பிரச்சார இயக்கத்தின் வர்க்கத் தன்மையைப் பற்றி தொகுதிக்கணக்கில் பேசுகின்றது. சுலோற்றர் தொழிலாளர் வர்க்கத்தின் முன்நிலையில் தமது கொள்கையை நியாயப்படுத்தவும் அதனை மார்க்சிசத்தின் அடிப்படையில் பேணவும் நினைத்திருப்பின் அவர் இந்த வேலையைச் செய்ய ஏ. ஹொரேயை தெரிவு செய்திருக்க மாட்டார். தொழிலாளர் புரட்சிக் கட்சி ஏனைய வர்க்கச் சக்திகளுக்குப் பேசுகின்றது என்பது தெளிவு.

கிளிவ் சுலோற்றரின் உற்சாகமளிப்புடன் ஹோரே தெளிவுபடுத்தும் அரசியல் நிலைப்பாடுகள் பக்கம் நாம் இப்போது திரும்புவோம்.

ஆகஸ்ட் 7ம் திகதிய வேர்க்கர்ஸ் பிரசில் (Workers Press) ஹோரே/சுலோற்றர் பிரித்தானிய சோசலிசத் தொழிலாளர் கட்சியை (SWP) பொஸ்னிய அரசாங்கத்தை ஆதரிக்க மறுத்தமைக்காகத் தாக்கியது. இதில் முன்னையது ''முழு பொஸ்னியன் மக்களினாலும் ஒரு பல் தேசிய அரசின் தலைமையில் ஒரு பல்தேசிய அரசாங்கத்தினைக் கொண்டு ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டது. அது சேர்பியர்கள், குரோஷியர்களுக்கு எதிரான தேசிய ஒடுக்குமுறையில் ஈடுபட்டிருக்கவில்லை, அதன் அயலவர்களிடமிருந்து பிராந்திய கோரிக்கையையும் விடுக்கவில்லை'' என விவரிக்கப்பட்டது.

## இசட்பெகோவிக்கின் ஆட்சி

இது முழுப் பொய்யாகும். இசட்பெகோவிக் ஒரு இனவாதத் தலைவர். அவர் ஒரு இஸ்லாமிய அரசின் வக்கீலாகத் தனது தொழிலை ஆரம்பித்தார். டிட்டோ ஆட்சியைக் கைப்பற்றியதன் சிறிது காலத்தின் பின்னர் இவர் 1946ல் இனவாத பிரச்சாரத்தில் ஈடுபட்டமைக்காகச் சிறையிலிடப்பட்டார். 1983ல் இவர் திரும்பவும் கைது செய்யப்பட்டு, இஸ்லாமிய அடிப்படைவாதத்தினையும் கம்யூனிச எதிர்ப்பினையும் வளர்த்தமைக்காகவும் பொஸ்னியா—ஹெர்ஸ்கோவிவில் இருந்து சகல சேர்பியர்களையும் குரோஷியர்களையும் வெளியேற்ற வேண்டுமென வாதிட்டமைக்காகவும் விசாரணைக்கு நிறுத்தப்பட்டார்,

1970ல் இரகசியமாக விநியோகிக்கப்பட்டதும் 1990 பகிரங்கமாக பிரசுரிக்கபட்டதுமான ஒரு கட்டுரையில் இசட்கோவிக் ''இஸ்லாமிய மதத்துக்கும் இஸ்லாமியர் அல்லாத சமூக, அரசியல் அமைப்புக்களுக்கும் இடையே சமாதானமோ அல்லது சகவாழ்வோ நிலவ முடியாது'' எனப் பிரசடனம் செய்தார்.

அவருடையது ''பல்லின அரசுக்கு'' இட்டுச் செல்லும் விதத்தில் ''பொஸ்னிய மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டது'' என்ற கோரிக்கை அவ்வாறே ஒரு மோசடியாகும். இசட்கொவிக் 1990ல் ஒரு கூட்டரசாங்கத்தின் பாகமாக தெரிவு செய்யப்பட்டார். இது மூன்று இனவாத அடிப்படையிலான கட்சிகளை-அவரின் ஜனநாயக நடவடிக்கைக்கான முஸ்லீம் கட்சி, ரடோவன் கரடிசிக்கின் சேர்பியன் ஜனநாயகக் கட்சி, குரோஷியன் ஜனநாயக யூனியன்—கொண்டிருந்தது.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

*6ம் பக்கத் தொடர்ச்*

யூகோசலாவியா சிதறுண்டு போய், பொஸ்னியா சுதந்திரப் பிரகடனம் செய்வதில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இந்தக் கூட்டரசாங்கமும் கூடவே சிதறுண்டு போயிற்று. சனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கினைக் கொண்டிருந்த சேர்பியர்கள் இதனை எதிர்த்தனர். பிரிவினை மீதான ஒரு கருத்துக் கணிப்பை அவர்கள் பகிஷ்கரித்தனர். சுதந்திரம் பிரகடனம் செய்யப்படின் உள்ளூர் சேர்பியத் தலைவர்கள் தாம் பொஸ்னிய ஆட்சியாளர்களில் இருந்து பிரிந்து சேர்பியாவுடன் ஒரு கூட்டுக்குச் செல்வோம் என்பதைத் தெளிவுபடுத்தினர். பொஸ்னிய குரோஷியர்கள், சுதந்திரத்தினை சேர்பியாவில் இருந்து பிரிந்து, சக்ரேப்பை நோக்கிச் செல்வதற்கான ஒரு வழிமுறையாக மட்டுமே ஆதரித்தனர்.

மிகவும் அடிப்படையான விதத்தில் ஹோரே/சுலோற்றர் ஒரு விடயத்தை – பொஸ்னிய அரசின் வர்க்கத் தன்மையை – மறந்து போய் விடுகின்றார்கள். ஆட்சியாளர்களின் "ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட", "பல்தேசியத்" தன்மை பற்றிய சகல பேச்சுக்களும் அவை திரும்பத்திரும்ப அவற்றை ஏகாதிபத்தியத்தின் உபயோகமான கையாட்களாக்கும் விதத்தில் முதலாளித்துவ ஜனநாயகத் தப்பெண்ணங்களுடன் ஊறச் செய்துள்ளதை மட்டுமே பிரத்தியட்சமாக்குகின்றது.

இசட்பெகோவிக் "முழு மக்களாலும்" தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற லிபரல் மூடக் கதையளப்புக்களுக்கு இடையேயும் அவரது அரசாங்கம் தலைநீட்டி வரும் முதலாளித்துவச் சொந்தக்காரர் தட்டினரதும், கொள்ளைக் காரர்களதும், அரச அலுவலர்களதும் திட்டவட்டமான வர்க்க நலன்களுக்குச் சேவை செய்கின்றது. இவர் தனிச் சொத்துடமையையும், கூலி உழைப்புச் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தினைக் கட்டி எழுப்புவதற்குத் தேசியப் பிரிவினைவாதமே சிறந்த வழியாகக் காண்கிறார்.

இந்த ஆளும் தட்டினரின் இலக்குகளைப் பொஸ்னியத் தொழிலாளர்கள் ஏதேனும் ஒரு அடிப்படையான விதத்தில் எதிர்ப்பின் ஆட்சியின் அஹிம்சைப் பூச்சுக்கள் வேகமாகக் களன்று ஓடும்.

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் வழிதடுமாறிய சேர்பிய விரோதச் சாய்வுகளுக்கு இடையேயும் அது குரோஷியன், சேர்பியன் சனத்தொகைக்கு எதிராக "இனக்குழு சுத்திகரிப்பில்" ஈடுபட்ட பொஸ்னிய அரசாங்கத் துருப்புக்களின் கணக்குகளை வெளியிடும் வண்ணம் கடமைப் படுத்தப்பட்டது. இருப்பினும் தனது 1993 செப்டம்பர் 12 வெளியீட்டில் 'வாஷிங்டன் போஸ்ட்' அறிவித்ததாவது: "பொஸ்னிய இராணுவம் போரினிக்கா போன்ற இனக் குழுக்கள் கலந்த பல நகரங்களில் இருந்து குரோஷியன் சனத் தொகையை பொஸ்னிய கைத் தொழில் மையங்களுக்குக் குறுக்காக முறைப்படி வெளியே தள்ளியது."

சமீப மாதங்களில் பொஸ்னிய முஸ்லீம் இராணுவம் குறிப்பிடத் தக்க விதத்தில் அதன் பலத்தினை அதிகரித்ததோடு இப்பிரச் சாரத்தினையும் உக்கிரமாக்கியது. மேலும் இந்த இராணுவ பலத்தின் முக்கிய மூலோபாயமானது ஒரு நேட்டோத் தலையீட்டுக்கான சாட்டாக இருக்கக் கூடிய ஒரு வகையிலான தாக்குதல்களுக்கு சேர்பியப் படைகளைத் தூண்டுவதாக விளங்கிற்று.

ஹோரே–சுலோற்றர் பொஸ்னியன் ஆட்சியாளர்களின் உயர்ந்த இலட்சியம் கொண்ட தமது சித்திரத்தினை ஒரு திட்டவட்டமான அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கின்றனர். இதற்கு விமர்சனமற்ற ஆதரவு வழங்கப்பட வேண்டும் என அவர்கள் கோருகின்றார்கள்.

### முதலாளித்துவ அரசாங்கங்களைக் கண்டனம் செய்ய உரிமை இல்லை

1993 ஆகஸ்ட் 28ம் திகதிய வேர்கர்ஸ் பிரசில் இசட்பெகோவிக் ஆட்சிக்கு எதிரான எந்தவொரு எதிர்ப்புக்கும் அவர்கள் வசைமாரி பொழிகின்றனர்: "பொஸ்னிய சுயநிர்ணயத்துக்கான ஆதரவு சரியாகச் சொன்னால் பொஸ்னியன் சமுதாயத்தின் உயிர்வாழ்க்கைக்கும் பொஸ்னியன் தொழிலாளர் வர்க்கத்தின் உயிர்வாழ்க்கைக்குமான ஆதரவாகும். பொஸ்னிய அரசாங்கம் இந்தப் போராட்டத்தினை முன்னெடுக்கின்றது. அத்தோடு சோசலிஸ்டுகள் ஒரு பதிலீட்டு வெகுஜன விடுதலை இயக்கத்தினைக் கட்டியெழுப்பும் வரை இன்றுள்ளதைக் கண்டனம் செய்ய அவர்களுக்கு உரிமை கிடையாது."

இசட் பெகோவிக் ஆட்சியைப் பற்றிய எந்தவொரு விமர்சனத்துக்கும் எதிரான இந்தத் தடையுத்தரவு, ஒரு முதலாளித்துவ அரசாங்கம் "ஒரு போராட்டத்தினை முன்னெடுக்கும்" வரை சோசலிஸ்டுகள் அதனைக் கண்டனம் செய்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர் என்பது மார்க்சிசத்தின் சர்சைக்குள்ளாக்க முடியாத உண்மைபோல் வழங்கப் பட்டுள்ளது.

அத்தகைய ஒரு அரசாங்கத்தின் மேல் தாக்குதல் தொடுப்பதினைத் தவிர்ப்பதன் மூலம் அவர்கள் எங்ஙனம் ஒரு "பதில் வெகுஜன விடுதலை இயக்கத்தை" சிருஷ்டிக்க முடியும் என்பது ஒருபோதும் விளக்கப்படவில்லை. ஹோரே/சுலோற்றருக்கு அத்தகைய ஒரு பதிலீட்டை கட்டியெழுப்புவதில் அக்கறை கிடையாது என்பது தெளிவு.

ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தின் போது குடியரசு அரசாங்கம் ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயகவாதிகள், அராஜகவாதிகளின் ஆதரவுடன் பிராங்கோவின் பாசிசப் படைகளுக்கு எதிராக 'ஒரு போராட்டத்தினை முன்னெடுத்த' வேளையில் உண்மையில் ட்ரொட்ஸ்கி அத்தகைய தடைக்கு கீழ்ப்படியவில்லை. பாசிசத்துக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளைக் காப்பது முதலாளித்துவ அரசினைத் தூக்கிவீசுவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என்பதை வலியுறுத்தி ட்ரொட்ஸ்கிச இயக்கம் குடியரசு அரசாங்கத்துக்கு எந்தவிதமான அரசியல் ஆதரவு வழங்குவதையும் எதிர்த்தது.

அத்தகைய சகல அரசியல் ஒப்புவமைகளும் அவற்றின் வரையறைகளைக் கொண்டுள்ளன என்பது உண்மையாயினும் இது சுலோற்றர்/ஹோரேக்கு எதிராகப் பலம்வாய்ந்த முறையில் பேசுகின்றது. ஸ்பெயினில் ஒரு உள்நாட்டு யுத்தம் பாசிச அச்சுறுத்தலுக்கு எதிரான ஒரு பாட்டாளி வர்க்க எழுச்சியின் அடிப்படையில் வெடித்தது. இந்த எழுச்சி பின்னர் முதலாளி வர்க்கத்தினாலும் அதன் கையாட்களாலும் சிரச்சேதம் செய்யப்பட்டது. பொஸ்னியாவில் தொழிலாளர் வர்க்கம் அதன் தலைமையால் முன்னர் காட்டிக் கொடுக்கப்பட்டமை இனக்குழு சோவினிஸ்டுகளின் போட்டிக் குழுக்கள் தொழிலாளர்களை ஒரு உள்நாட்டு யுத்தத்தினுள் இழுப்பதை அனுமதித்தது.

ஸ்பானியாவில் பாசிசத்துக்கு எதிரான ஸ்பானியத் தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக, சமூக வெற்றிகளைக் காக்கும் போராட்டமே குடியரசு அரசாங்கத்தினால் காட்டிக் கொடுக்கப்பட்டது என்பதை நிரூபிக்க முடியும். ஆனால் பொஸ்னிய அரசாங்கம் தலைமை தாங்கிக் கொண்டுள்ள "போராட்டத்தின்" தன்மை என்ன?

ஹோரே/சுலோற்றர் அது "பொஸ்னியன் சமுதாயத்தின் உயிர்வாழ்வு"க்காகப் போராடுகின்றது என வாதிக்கின்றார்கள். இந்த உரத்த தொனியும் முற்றிலும் வர்க்க பேதமற்ற வார்த்தையும் ஏகாதிபத்தியத்தின் உதவியோடு ஒரு பிராந்திய, இனவாத மாடத்தினைக் கூறுபோடப் போராடும் ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தினைக் காப்பாற்ற நடைமுறையில் சூடேற்றுகின்றது.

தொழிலாளர் புரட்சிக் கட்சியினால் பொஸ்னியாவில் உள்ள ஆட்சியாளர்களுக்கும் சேர்பியா, குரோஷியாவில் உள்ள அதன் சகாக்களுக்கும் இடையே எந்தவிதமான வேலைத்திட்ட வேறுபாடுகளையும் சுட்டிக்காட்ட முடியாது. எதுவுமே கிடையாது. உதவாக்கரையான தார்மீக வாதத்தின் அடிப்படையில் அது சேர்பிய சோவினிசத்துக்கு எதிராக முஸ்லீம் சோவினிசத்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானம் செய்துள்ளது.

### "அரசியல் கைதி முகாம் காவலர்களும் கைதிகளும்"

யூகோசலாவியத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் அழைப்புக்கு எதிராக ஹோரே/சுலோற்றர் கூறியதாவது: "பொஸ்னியாவில் வர்க்கப் போராட்டத்தையிட்டுக் கவலைப்பட ஒரு தொழிலாளர் வர்க்க இடது கிடையாது." இந்த நிலைமைகளின் கீழ் முஸ்லீம், சேர்பிய, குரோஷிய தொழிலாளர்களுக்கு இடையேயான ஐக்கியம் பற்றிய பேச்சுக்கள் "அரசியல் கைதி முகாம் காவலாளிகளுக்கும் கைதிகளுக்கும் இடையேயான ஐக்கியத்துக்கு" வக்காலத்து வாங்குவதாகும் என ஹோரே/சுலோற்றர் பிரகடனம் செய்தனர்.

இது குட்டி முதலாளித்துவ சோவினிசத்தின் அரசியலாகும். அங்கு தொழிலாளர் வர்க்கம் இல்லை, வர்க்கப் போராட்டம் இல்லை, ஆதலால் சோசலிச அரசியலுக்கு இடம் கிடையாது. இனவாதத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகத் தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டும் எந்தவொரு சாத்தியத்தினையும் அழித்து எழுதிவிட்டு, தொ.பு.க. கோட்பாட்டாளர்கள் யுத்தமிடும் முதலாளித்துவக் கன்னைகளிடையே தேர்ந்து எடுப்பதைத் தவிர தெரிவதற்கு எதுவும் எஞ்சியில்லை எனப் பிரகடனம் செய்கின்றனர்.

பொஸ்னியன் ஆட்சியாளர்கள் தொடர்பாக 'ஒரு நிலைப்பாட்டை எடுக்க' மறுப்போர் 'அதற்குப் பதிலாக கருத்தற்ற தொழிலாளர் வர்க்கத் தீர்வு பற்றிப் பேசுவதாக' அவர்கள் கண்டனம் செய்துள்ளனர். ஒரு ஸ்தூலமான மூலோபாயம் – 'நிஜ' போராட்டம் – இனக்குழு அடிப்படையிலான இராணுவத்தினையும் ஏகாதிபத்திய குண்டுவீச்சு தாக்குதல்களையும் ஆதரிப்பதை உள்ளடக்கியதாக இருக்கும் போது ஒருவர் தொழிலாளர் வர்க்கத்தினை அடிப்படையாகக் கொள்வது 'கருத்தற்றதாக' உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக சேர்பியத் தொழிலாளர்கள் ஒரு கூட்டம் அரசியல் கைதி முகாம் காவலர்கள் அன்றி வேறொன்றும் இல்லாதிருப்பின் நேட்டோ, பொஸ்னிய சேர்பியர்கள் மீது அல்லது பெல்கிரேட் மீது குண்டுவீச்சு நடாத்துமிடத்து அதை யார் எதிர்க்க முடியும்? ஹோரே/சுலோற்றர் திரும்பத் திரும்ப இந்த அம்சத்துக்குத் திரும்புகின்றனர். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தவறான பேரினைக் கொண்ட 'இன்டர்நஷனல்' சஞ்சிகையின் 1993 ஆகஸ்ட் வெளியீட்டில் "மேற்கத்தைய ஏகாதிபத்தியத்துக்கு இடதின் அடிபணிவும் பால்கனில் சேர்பிய தேசியவாதமும்" என்ற தலைப்பிலான கட்டுரையில் அவர்கள் பால்கன் மக்களை ஐக்கியப்படுத்தும் எந்தவொரு முன்நோக்கினையும் தள்ளுபடி செய்தனர்: "யுத்தம் பொஸ்னியாவுக்குள்ளேயான சேர்பியன் குரோஷியன் விஸ்தாரிப்புவாதத்தினால் ஏற்பட்டதால் "பொஸ்னிய மக்கள் 'யுத்தத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தை' நடாத்த முடியாது... ஒரு பால்கன் சோசலிச ஒன்றியம் உண்மையில் ஒரு முற்றிலும் தன்னிச்சையான கருத்துப்பாடாகும். அது உண்மையில் இருந்து வருவது போல் எந்தவொரு போராட்டத்தினையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல."

### பூரணத்துவமான உண்மைக்கு அடிபணிவு

"பூரணத்துவமான உண்மைக்கு அடிபணிவது என்ன? பொஸ்–னியாவில் இன்று உண்மையில் இருந்து கொண்டுள்ள போராட்டம் போல்" இது தொழிலாளர் வர்க்கத்தினுள் ஒரு புரட்சிகரத் தலைமை இன்மையாலும் முதலாளித்துவ சோவினிச

*8ம் பக்கம் பார்க்க*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

*7ம் பக்கத் தொடர்ச்சி*

போக்குக்களின் ஆதிக்கத்தினாலும் உருவமைக்கப்படவில்லையா?

தொழிலாளர் வர்க்கம் ஒரு அனைத்துலக வர்க்கம் எனவும் அது முதலாளித்துவத்தைத் தூக்கி வீசி, ஒரு புதியதும் உயர்ந்ததுமான சமூக அமைப்பைச் சிருஷ்டிப்பதன் மூலம் மட்டுமே இந்தப் பிணக்குகளுக்கு தீர்வு காண முடியும் என்ற முன்னோக்கினை முன்வைப்பதன் மூலம் புரட்சிக் கட்சி அத்தகைய போக்குக்களுக்கு எதிராக விடாப் பிடியாகப் போராட வேண்டும்.

ஹோரே/சுலோற்றர் இந்த அடிப்படைக் கொள்கையை நிராகரித்துவிட்டு சோவினிசத்தின் ஆதிக்கம் ஒரு மாற்ற முடியாத 'யதார்த்தமாக' ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். அவர்கள் மார்க்ஸ் ஒருமுறை குறிப்பிட்டது போல் "இன்றைய பன்றி பேராசைக் காரர்களை நேற்றைய பன்றி பேராசைக்காரர்களால் நியாயப் படுத்துவதில் நிபுணர்கள்."

சேர்பியர்களும் குரோஷியர்களும் "விஸ்தரிப்புவாதிகளாக" இருப்பதால் இந்த உடன்பிறப்பைக் கொல்லும் யுத்தத்தினை எதிர்ப்பதில் பொஸ்னியத் தொழிலாளர்கள் குரோஷியாவிலும் சேர்பியாவிலும் உள்ள அவர்களின் வர்க்க சகோதரர்களுடன் இணைய முடியாது என தொ.பு.க. வலியுறுத்துகின்றது. மார்க்சிசத்துடன் ஏதோ தொடர்பு கொண்டுள்ளதாக நடித்துக் கொள்ளும் ஒரு அமைப்பின் விநோதமான நிலைப்பாடு என்னே!

முதலாம் உலக யுத்தத்தின் போது இரண்டாம் அகிலத்தின் சமூக சோவினிஸ்டுகள் சரியான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்ததாயும் லெனின் ஒரு நம்பிக்கையில்லாத "அர்த்தமற்ற தொழிலாளர் வர்க்கத் தீர்வினை" முன்வைத்தார் என்ற முடிவுக்கும் மட்டுமே ஒருவர் வரமுடியும். மிலோசேவிக் (Milosevic) ருட்ஸ்மன் (Tudjman) ஆட்சியாளர்களின் "விஸ்தரிப்புவாதப் போக்குக்களின்" அடிப்படையில் பொஸ்னியன் தொழிலாளர்கள் குரோஷியன் சேர்பியன் தொழிலாளர்களுடனான ஐக்கியத்தினை நிராகரிக்க வேண்டின் ஜேர்மன் சமூக ஜனநாயகவாதிகள் ஜேர்மன் தொழிலாளர்களை "ரூஷ்ய நாடோடிகளுக்கு" எதிராக தாயகத்தை காக்கும்படி கூறுவது நியாயமானது. மேலும் அந்தக் காலப் பகுதியின் சேர்பிய சோசலிஸ்டுகள் ஆக்கிரமிப்பு 'ஹுன்ஸ்' களை எதிர்த்துப் போராடுவதில் 'தமது' அரசாங்கத்துக்கு உதவிக்கு வராதது முற்றிலும் தவறாகும்.

### வரலாறும் அடிப்படைக் கொள்கையும்

ஹோரே/சுலோற்றர் பால்கன்ஸ் தொடர்பான மார்க்சிச இயக்கத்தின் வேலைத்திட்ட மரபுரிமைகளை வழக்காறான முறையில் தள்ளுபடி செய்கின்றனர். ஒரு பால்கன் சோசலிச ஒன்றியத்தின் "முற்றிலும் தன்னிச்சையான கருத்துப்பாடு" என அவர்கள் அழைப்பதானது கடந்த நூற்றாண்டின் முடிவில் இருந்து இப்பிராந்தியத்தில் சோசலிச அரசியலின் பிரதான அச்சினை உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

போட்டி பேரரசுகளுக்கும் குட்டி அரசுகளுக்கும் இடையே பால்கன் பிரிக்கப்படுவதற்கும் வெளிநாட்டுச் சக்திகளும் தேசிய ஆளும் வர்க்கங்களும் தொடர்ந்து சோவினிசத்தையும் யுத்தத்தையும் தூண்டி விடுவதற்கும் முடிவு கட்டுவதற்கான ஒரே வழியாகவே மார்க்சிஸ்டுகள் ஒரு பால்கன் சோசலிஸ்ட் சமஷ்டிக்கான கோரிக்கையை அபிவிருத்தி செய்தனர். தொ.பு.க. இன்று வெறுப்புடன் நிராகரிக்கும் இந்தக் கோரிக்கையின் ஆழமான உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள இப்பிராந்தியத்தின் வரலாற்றை ஆய்வது அவசியம். 'வேர்க்கர்ஸ் பிரஸ்' பக்கங்களில் ஹோரே கேம்பிரிஜ் வரலாற்று ஆராய்ச்சி மாணவனாகக் கொண்டாடப்படும் அதே வேளையில் அவரின் ஆய்வுகள் முற்றிலும் 1940களில் பாசிச உஷ்டாஷே ஆட்சியில் இருந்து இன்றைய ருட்ஸ்மனின் வலதுசாரி அரசாங்கம் வரை குரோஷியன் தேசிய வாதத்துக்கான இருப்பின்மை வாதத்தினை அபிவிருத்தி செய்வதிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் யூகோசலாவியாவிலான இன்றைய மோதுதல் தொடர்பான ஒரு சோசலிசக் கொள்கையை பால்கனின் சிக்கலான தேசியப் பிரச்சினை பற்றிய நூற்றாண்டு காலப் பழமைவாய்ந்த மார்க்சிச விவாதத்தினை ஒரு விமர்சன ரீதியில் உள்ளீர்த்துக் கொள்ளாமல் ஒருவர் விவரிக்கத் தொடங்க முடியாது.

ஹோரே/சுலோற்றருக்கு இந்த வரலாறு கிடையாது. இது அவர்களின் இன்றைய நடவடிக்கைகளுக்கு ஒரு வசதியான நிலைப்பாடு. எங்கு வரலாறு இல்லையோ அங்கு அடிப்படைக் கொள்கைகளும் கிடையாது. வரலாறு சம்பந்தமான இந்த மனப்பாங்கில் – அதன் அரசியல் சம்பந்தமான வேறு பல விடயங்களில் போல தொ.பு.க. புதிதாக ஒன்றையும் கண்டுபிடிப்பதில்லை. அது ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தினையும் அதன் தொடர்புச் சாதனங்களையும் சும்மா பின்பற்றுகின்றது. முன்னாள் யூகோசலாவியாவின் சமீபகாலச் சம்பவங்கள் தலைப்புச்செய்திகளாக வெளியாகத் தொடங்கியதும் இந்த மோதுதல்களுக்கு அடிப்படையான வரலாற்று விவகாரங்கள் பற்றி ஒரு குறிப்பிடத்தக்க மௌனம் நிலவியது.

இராஜாங்க திணைக்களத்தினதும், ஐக்கிய நாடுகள் சபையினதும், நேட்டோவினதும் தொ.பு.க. வினதும் அறிக்கைகள் ஊடாக எதிரொலிக்கும் கபடத்தனமான "ஆக்கிரமிப்பு" கண்டனங்களையும் பொஸ்னியன் "சுயநிர்ணயம்" "தேசிய இறைமை"க்கு ஆதரவான பிரகடனங்களையும் ஒருவர் நியாயமானதென ஏற்றுக் கொள்வதற்கு வரலாற்று அறிவீனம் இன்றியமையாதது.

### 'கிழக்கத்தைய பிரச்சினை'

இன்றைய நிலைமையில் கடந்து சென்ற ஒரு சகாப்தத்துக்குத் திரும்பும் ஒரு பலம் வாய்ந்த உணர்வு காணப்படுகின்றது. ரூஷ்யப் படைகள் சேர்பியருக்கு அருகே நிலைப்பாடுகளை எடுத்துக் கொண்டுள்ளதோடு அமெரிக்காவும் ஜேர்மனியும் தமது ஆதரவை முறையே முஸ்லீம்களுக்கும் குரோஷியர்களுக்கும் வழங்கியுள்ளனர். பொஸ்னிய உள்நாட்டு யுத்தத்துக்கு மேலதிகமாக கிரேக்க அரசாங்கம் சமீப மாதங்களில் பின்னையதன் தேசிய அடையாளம் சம்பந்தமான பிரச்சினை தொடர்பாக ஒரு மாசிடோனியா முற்றுகையை ஏற்படுத்தியது.

முதலாளித்துவ விமர்சகர்களும் அத்தோடு அவர்களின் 'சோசலிஸ்ட்' போலிகளும் யூகோசலாவியாவிலான இன்றைய தகராறின் இந்தப் பண்புகளை பால்கன் மக்களின் உளவியலுக்கோ அல்லது பெரிதும் அடிக்கடி சேர்பியர்களின் வில்லன் பண்புக்கோ காரணம் கற்பிக்கிறார்கள்.

பழமைக்கான இந்த வெளிப்படையான திருப்பம் ஒரு புறநிலை மூலத்தைக் கொண்டுள்ளது. முதலாளித்துவ அமைப்பை முழுமையாக நெருக்கடிக்குள் தள்ளியுள்ள உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசு முறைக்குமான முரண்பாடு நீண்ட காலமாக நசுக்கப்பட்டதும் ஆனால் ஒருபோதும் தீர்க்கப்படாததுமான தேசிய, இனக்குழுப் பிணக்குகளை திரும்பவும் உயிர்ப்பித்துள்ளது. ஒட்டோமன் பேரரசின் வெடிப்பில் இருந்து இது பால்கனை பிளேக் நோயாகப் பீடித்தது.

பால்கன் பிரச்சினைக்கான மார்க்சிசத்தின் அழியாத பங்களிப்பு ஒரே சிறிய பிராந்தியத்தில் வாழும் பல இன, தேசிய குழுக்களுக்கிடையே வரலாற்று ரீதியில் தீர்வுகாண முடியாத பிணக்காக இருந்து வரும் ஒன்றுக்கு ஒரு அணுகுமுறையைச் சரியாக அபிவிருத்தி செய்வதே. பொருளாதார அபிவிருத்தி அளவையியலின் அடிப்படையில் மார்க்சிஸ்டுகள் தென் சிலாப் மக்களை தனியான ஒரு கூட்டு அரசில் இணைக்க வாதிட்டனர்.

1815ல் இருந்து 1915 வரை 'கிழக்கத்தைய பிரச்சினை' ஐரோப்பிய விவகாரங்களில் சச்சரவுக்கான பெரும் எலும்புத் துண்டாக விளங்கியது. இறுதியில் முதலாம் உலக யுத்தத்துக்கான தீப்பொறியையும் வழங்கியது. ஐரோப்பிய பெரும் வல்லரசுகள் – பிரித்தானியா, பிரான்ஸ், ஆஸ்திரியா–ஹங்கேரி, ரூஷ்யா அத்தோடு சில சமயங்களில் பிரஷ்யா – பெரிதும் விரகி முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிராந்தியத்திற்காகவும் சிதறுண்டு போகும் ஒட்டோமன் பேராரசிற்கு சொந்தமான பிராந்தியங்களின் தலைவிதிக்காகவும் போட்டியிட்டன.

பிரித்தானியாவும் ஓரளவுக்கு ஆஸ்ட்ரோ–ஹங்கேரியன் ஹப்ஸ்பேக் பேரரசும் சமீபகிழக்கில் (Near East) ரூஷ்ய பரம்பலுக்கு ஈடாக ஒட்டோமன் பிராந்தியங்களின் பிராந்திய முழுமையை ஆதரித்தன. ரூஷ்யாவும் பிரான்சும் இப்பிராந்தியத்தில் உள்ள தேசியவாத இயக்கங்களுடன் சில தருணங்களில் அனுதாபத்துடன் நடந்து கொள்வதன் மூலம் தமது நலன்களைக் கடைப்பிடிக்கும் படி தள்ளப்பட்டன.

### பொஸ்னியா–ஹேஸ்கொவினா மீதான பிணக்கு

பொஸ்னியா–ஹேஸ்கொவினா என்ற சிறிய பிராந்தியத்தின் ஆதிக்கத்துக்கான போட்டியில் அப்பிராந்தியத்தின் வேறுபட்ட தேசிய இனங்கள் ஈடுபட்டதோடு ஒரு குழுவுக்கு எதிராக மறு குழுவை குழிபறிக்க வைப்பதில் ஏகாதிபத்திய சக்திகள் சாதுரியமாகச் செயற்பட்டன.

1875ல் பொஸ்னியா, ஹேஸ்கொவினாவில் விவசாயிகளின் கிளர்ச்சி வெடித்தது. அப்போது இது ஒட்டோமன் பேரரசின் ஆதிக்கத்தில் இருந்தது. விவசாயிகளினை அடக்கும் துருக்கி ஆட்சியாளர்களதும் வல்லரசுகளதும் கூட்டு முயற்சி இலாயக்கற்றதாகப் போயிற்று. ஒரு வருடத்தின் பின்னர் சேர்பியாவும் மொன்டினிக்றோவும் ஒட்டோமன் பேரரசுக்கு எதிராக ஒரு சிறியதும் தோல்வி கண்டதுமான யுத்தத்தினைத் தொடுக்கச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது.

அடுத்த ஆண்டு ரூஷ்யா யுத்தப் பிரகடனம் செய்ததோடு ஒட்டோமன் இராணுவத்தின் மீது ஒரு விரைவான வெற்றியை அடைந்ததோடு சான் ஸ்டீபனோ உடன்படிக்கையில் அதன் சொந்த நிபந்தனைகளைத் திணித்தது. பிரித்தானியா, ஜேர்மனி, ஹப்ஸ்பேக் பேரரசு அனைத்தும் பால்கனில் அதிகார சமபலநிலை இங்ஙனம் நிலைகுலைக்கப்படுவதை எதிர்த்தன. அவை 1878ல் திரும்பவும் பிராந்தியத்தினை மறுபங்கீடு செய்யும் பொருட்டு பேர்ளின் காங்கிரசைக் கூட்டின.

வல்லரசுகள் ஒட்டோமன் பேரரசு விவசாயிகளின் கிளர்ச்சியினாலும் யுத்தத்தினாலும் இழந்த பிராந்தியங்களின் பெரும் பங்கைப் பெற்றன. ஆஸ்திரியா–ஹங்கேரிக்கு பொஸ்னியா–ஹேஸ்கொ[illegible]ா வையும் சேர்பியாவில் இருந்து மொன்ரினிக்ரோவைப் பிரித்த ஒரு துண்டு நிலமான நோவி பசாரின் சஞ்சாக்கையும் ஆக்கிரமித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. ரூஷ்யா திரும்பவும் தென் பெசாரபியாவைப் பெற்றது. பிரித்தானியா சைப்பிரசை ஆக்கிரமித்துக் கொண்டது. பேர்ளின் காங்கிரஸ் பால்கன் அரசுகளின் தேசிய கோரிக்கைகள் எதனையும் தன்பாட்டில் தீர்த்து வைக்காததோடு பிரிவினைகளையும் அவற்றிடையே எதிர்கால மோதுதல்களுக்கான விதைகளைத் தூவவுமே உதவியது.

பொர்ஸ்னியா–ஹேர்ஸ்கொவினா ஹப்ஸ்பேர்க்கை கைப்பற்றுவது, முஸ்லீம், சேர்பிய சனத்தொகை இரண்டினதும் கசப்ப[illegible] எதிர்ப்பினைத் தாண்டுவதன் மூலம் மட்டுமே அமுல் செய்யக் கூடியதாக இருந்தது. ஆஸ்திரியர்கள் பிராந்தியத்தினை ஆக்கிரமிக்க குரோஷியன் பதின்மூன்றாவது இராணுவப் படைப் பிரிவை அனுப்பியதோடு அதன் புதிய நிர்வாகத்தை குரோஷியன் அதிகாரிகளைக் கொண்டு நிரப்பியது. குரோஷிய சட்ட சபையும் அதன் ஆளுனரும் ஹப்ஸ்பேர்க் பேரரசனுக்கு பிராந்தியத்தினை அதன் சொந்தமாக இணைத்துக் கொள்ள 'பெட்டிசம்' வரைந்தனர்.

சேர்பியாவும் கூட பிராந்திய உரிமை கோரியது. அதன் சனத்தொகை ஆகக் குறைந்தது 40% சேர்பியகளைக் கொண்டிருந்தது. இரட்டை பேரரசன் பொஸ்னியா–ஹேஸ்கொவினா சேர்பியாவுடன் இணைக்கப்படுவதை எதிர்த்தான். இது அப்பிராந்தியத்தில் உள்ள தேசிய இயக்கத்தைப் பலப்படுத்தும் எனவும் ஹப்ஸ்பேர்க் பிராந்தியங்களில் வாழும் தென் சிலாவ் மக்களை கவரும் ஒரு கம்பமாக இது விளங்கும் எனவும் அஞ்சினான். அதே சமயம் இது மாகாணங்களை குரோஷியாவுடன் சேர்க்கும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. குரோஷியன் தேசிய வாதத்தினை இது ஊக்கப்படுத்தும் என அஞ்சியது.

ஆஸ்திரியாவுடன் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹங்கேரியுடன் பிராந்தியத்தினைச் சேர்ப்பது வீயன்னாவுக்கும் புடாபெஸ்ட்டுக்கும் இடையே இரட்டைப் பேரரசனால் நிலை நாட்டப்பட்ட சமபல நிலையைத் தலைகீழாக்கலாம் என்ற அச்சத்தினால் இவ்விவகாரம் மேலும் சிக்கலாக்கப்பட்டது. இதன் பெறுபேறாக மாகாணங்கள் முடியரசனின் நேரடிக் கட்டுப்பாட்டினுள் கொணரப்பட்டதோடு இணை நிதி அமைச்சரினால் நிர்வகிக்கப்பட்டது.

பொஸ்னியா-ஹேஸ்கொவினாவுக்கான சுயநிர்ணய விவகாரம் என்றுமே ஹப்ஸ்பேக் ஆட்சியாளர்களின் அக்கறைக்குரியதாக இருந்தது கிடையாது என்பதை சொல்ல வேண்டியதில்லை. மேலும் தனிப்பட்ட பொஸ்னியன் அல்லது முஸ்லீம் இயக்கம் கூட இருக்கவில்லை. இந்த ஹப்ஸ்பேர்க் நிதி அமைச்சரே சேர்பியருக்கும் குரோஷியர்களுக்கும் இடையேயான போட்டியை உக்கிரமாக்கியும், சுரண்டுவதன் மூலமும் பொஸ்னியன் முஸ்லீம் தேசிய வாதத்தினை - அதிக வெற்றியின்றி - வளர்த்தெடுக்கப் பின்னர் முயன்றார்.

1908ல் பேரளவில் ஒட்டோநோமன் சொந்தத்தில் இருந்து வந்த பொஸ்னியா-ஹேஸ்கொவினாவை ஆஸ்ட்ரோ-ஹங்கேரி இணைத்துக் கொண்டமை பிராந்தியத்தில் சமபல நிலைமையைக் குழம்பிப் போகச் செய்தது. இந்த ஒருதலைப் பட்சமான நடவடிக்கை சேர்பியா, ரூஷ்யா [illegible] இரண்டையும் ஆத்திரமடையச் செய்தது. இவை இணைப்பு பிராந்தியத்திலான தமது ஆதிக்கத்துக்கு ஒரு அடியாகக் கண்டன. இது கிழக்கத்தைய பிரச்சினையின் முரட்டுத்தனமான மீளதிறப்புக்கான ஒரு சிக்னலாக விளங்கியது.

இது 1912ம் ஆண்டின் முதலாவது பால்கன் யுத்தத்தினை வெடிக்கச் செய்தது. இது பால்கன் அரசுகளின் ஒரு கூட்டு வடிவத்தை - சேர்பியா, பல்கேரியா, கிரீஸ், மொன்டிநிக்ரோ - ஒட்டோமன் பேரரசுக்கு எதிராக எடுக்கச் செய்தது. துருக்கிய இராணுவம், பால்கன் படைகளின் சிறப்பு வல்லமையின் எதிரே சரிந்து போயிற்று. அது அல்பேனிய, மசிடோ[illegible]ப் பிராந்தியங்களை தாண்டிச் சென்றது.

1913 மேயில் வல்லரசுகள் போருக்கு ஒரு முடிவுகட்ட நெருக்கும் வகையில் தலையிட்டதோடு, லண்டன் உடன்படிக்கைத் தீர்வுகளின் சரத்துக்களைத் திரும்பவும் நடைமுறைக்கிட உத்தரவிட்டன. இத்தாலியின் ஆதரவுடனான ஆஸ்திரியா-ஹங்கேரியின் முக்கிய நோக்கம், அட்ரியாட்டிக் கடலில் ஒரு துறைமுகத்தைப் பெற்றுக் கொள்ளும் அதன் இலக்கினை மறுப்பதாகும். அந்த நோக்கில் அவர்கள் பலம்வாய்ந்த தேசிய எல்லைகளுடன் கூடிய ஒரு சுதந்திர அல்பேனியாவை அமைக்கும்படி வலியுறுத்தினர்.

அல்பேனியப் பிராந்தியத்தினைத் திட்டமிட்டபடி பிரிக்கும் தமது இலக்கில் ஏமாற்றம் கண்ட சேர்பியா, கிரீஸ் இரண்டும் பல்கேரியாவுக்கு நஷ்டஈடாக வழங்கப்பட்டிருந்த மசிடோனியன் பிராந்தியத்தினைக் கோரின. இது இரண்டாம் பால்கன் யுத்தத்துக்கான களத்தைத் தயார் செய்ததோடு அது பல்கேரியாவின் தோல்வியிலும் முடிந்தது. கிரீசும் சேர்பியாவும் மசிடோனியாவைத் தமக்கிடையே பிரித்துக் கொண்டன. சேர்பியாவும் மொன்டிநீக்ரோவும் நொவி பசார் சஞ்சக்கினை பிரித்துக் கொண்டன. இதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையே முதற் தடவையாக ஒரு பொது எல்லையை ஏற்படுத்திக் கொண்டன.

ஏகாதிபத்தியவாதிகள் அல்பேனியாவை பிரித்தானியா தலைமையிலான வல்லரசுகளினால் ஆளப்பட வேண்டிய ஒரு காவலரண் ஆட்சிப் பிராந்தியமாகப் பேர் சூட்டினர். அவர்கள் பெருவாரியான அல்பேனிய மக்களைக் கொண்ட பகுதிகளை - மிக முக்கியமாக கொசோவா - இந்த புதிய உரிமைப் பிராந்தியங்களுக்கு வெளியே தள்ளி எல்லைகளை வரைந்தனர். டச்சு பாதுகாப்புப் படைகளை ஒழுங்கு செய்யும் வேலையைப் பொறுப்பேற்றது. ஒரு அனைத்துலக கட்டுப்பாட்டு ஆணைக்குழு (I.C.C.) வல்லரசுகளின் ஒவ்வொரு பிரதிநிதியையும் ஒரு அல்பேனியனையும் கொண்டிருந்தது - ஒரு அரசியலமைப்புச் சட்டத்தினை வரைந்தது. ஒரு அரசியலமைப்புச் சட்ட ரீதியான முடியாட்சி சிம்மாசனத்தில் இருப்பதற்கு ஒரு ஜேர்மன் இளவரசர் தெரிவு செய்யப்பட்டார். இந்த ஒழுங்குகள் பரந்தளவிலானதும் தாங்கிப் பிடிக்கக் கூடியதுமான ஒரு விவசாயிகள் கிளர்ச்சியினை தூண்டிவிட்டது. இது முதலாம் உலக யுத்தம் வரையும் நீடித்ததன் மூலம் பிராந்தியத்தினை ஆட்சி செய்ய முடியாமல் செய்தது.

## தென் சிலாவ் மக்களை ஐக்கியப்படுத்தல்

ஏகாதிபத்தியவாதிகளின் இந்தத் தொடர்ச்சியான பிரித்தாளும் கொள்கையை வருணிப்பதற்கு 'பால்கன்மயம்' (Balkanisation) என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது. குடாநாட்டின் மக்களை அடிமைப்படுத்தவும் தமது போட்டியாளர்களுக்கு எதிராக தமது சொந்த மூலோபாய நலன்களை அடையவும் பல்வேறு சக்திகளும் தேசிய, இனக்குழுப் பிணக்குகளை சாதுரியமாகப் பயன்படுத்தின.

இந்த வரலாற்றினைத் தள்ளுபடி செய்துவிட்டு, சுலோற்றரும் ஹோரேயும் இப்போது பால்கன்மயத்தினை ஒரு வரலாற்றுச் சாபக்கேட்டில் இருந்து நற்குணமாகப் பரிணாமம் செய்ய முயற்சிக்கின்றனர். அவர்களின் அரசியல் அகராதியில் இது "சுயநிர்ணயம்" "விடுதலை"யைக் குறிக்கும் சொல்லாக மாறுகின்றது.

பால்கனில் தேசியப் பிரச்சினை ஸ்தூலமாக அபிவிருத்தி கண்டது எப்படி? இப்பிராந்தியத்தில் தேசிய இணைப்பு, பிரிவினைவாதம் தொடர்பாக மார்க்சிஸ்டுகள் கடைப்பிடித்த நிலைப்பாடு என்ன?

ஒட்டோமன் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பால்கனிலான தேசீய ஒடுக்குமுறை தேசியக் குழுக்கள் அரச எல்லைகளால் பிரிக்கப்பட்டதன் மூலம் அதன் குரூர வடிவத்தினை எடுத்தது. உதாரணமாக சேர்பிய சனத்தொகை ஐந்து வேறுபட்ட நாடுகளில் காணப்பட்டது.

முதலாளித்துவ தேசியவாத இயக்கத்தினுள்ளேயான மிகவும் முற்போக்கான மூலகங்கள் தென் சிலாவிக் மக்களை ஐக்கியப் படுத்துவதை - சேர்பியர், குரோஷியர், சுலோவினியர், முஸ்லீம்கள் போன்றோர் - தேசிய விடுதலைக்கான பாதையாக தோற்றுவித்தது.

குரோஷிய தேசியவாத இயக்கம் இந்த விவகாரத்தில் பிளவுபட்டது. ஒரு கன்னை குரோஷியன் தனிச் சிறப்புரிமைவாதத்தினை அடிப்படையாகக் கொண்டது. அனைத்து குரோஷியன் நிலங்களதும் இணைப்புக்கு அழைப்பு விடுத்ததோடு - இதில் குரோஷியா, சுலோவீனியா டல்மட்டியா, பொஸ்னியா-ஹேர்ஸ்கோவினா - ஒரு தனியான அரசில் ஆஸ்திரியா, ஹங்கேரியுடன் சேர்ந்து கொள்வதை அவர்கள் உள்ளடக்கிக் கொண்டனர். மற்றொரு கன்னை சேர்பியர்களதும் குரோஷியர்களதும் ஐக்கியத்தினை ஆதரித்ததோடு ஒருவர் மற்றவருக்கு குழிபறிக்கும் ஹப்ஸ்பேர்க் பேரரசின் ஓயாத பிரயத்தனங்களை எதிர்த்தது.

இதே விதத்தில் சேர்பிய தேசிய இயக்கம், தனியொரு தேசியத்தில் அனைத்து சேர்பியர்கள், குரோஷியர்கள், சுலோவீனியர்களின் ஒருங்கிணைப்பை தழுவிக் கொண்டவர்களுக்கும், மாபெரும் சேர்பியா என்ற முறையிலும் அனைத்து சேர்பியர் வாழும் நிலமாக விஸ்தரிப்பதன் அடிப்படையில் சிந்தித்தவர்களுக்கும் இடையிலும் பிளவுண்டு போயிற்று.

இந்த விதத்தில் மார்க்சிஸ்டுகள் மட்டுமன்றி பால்கனில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்த பெரிதும் தூரதிருஷ்டிமிக்க தேசியவாதிகள் கூட சுயநிர்ணயம் தென்சிலாவியர்களை தனியொரு அரசில் ஐக்கியப்படுத்தும் ஒரு போராட்டமாக அன்றி அவர்களை குட்டி விருத்தளிப்பவராகத் தனிமைப்படுத்துவது அல்ல என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர்.

குரோஷியர்களதும் சேர்பியர்களதும் விடயத்தில் ஒருவர் மொழிவாரியாக வேறுபட்டவர்களுடன் அல்லாது மதத்தினால் மட்டும் வேறுபட்ட முறையே ஹப்ஸ்பேர்க், ஒட்டோமன் பேரரசுகளின் மேலாதிக்கத்துக்குட்பட்ட மரபுவழி பற்றியே ஆய்கின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்து மார்க்சிஸ்டுகள் ஒரு புறத்தில் நிஜ தேசிய இனங்களுக்கும். மறுபுறத்தில் மதம் அல்லது இனக் குழுக்களுக்கும் இடையே இனங்காண்பதை - இப்போது தொ.பு.க.வினால் உதறித் தள்ளப்பட்டும் பொதுவில் குட்டி முதலாளித்துவத்திடையே செல்வாக்கிழந்தும் உள்ளதை-வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர்.

பழைய பால்கன் அரச வம்சத்தினரும் தலையெடுத்து வந்த முதலாளித்துவ வர்க்கமும் ஒன்றிணைப்புப் பணியை அமுல் செய்ய இலாயக்கற்றதாக நிரூபிக்கப்பட்டது. ஒரு புறத்தில் அவை வெளிநாட்டு மூனதனத்தினையும் ஏகாதிபத்திய இராஜ தந்திரத்தினையும், மறுபுறத்தில் அரைநிலமானித்துவ உறவுகளையும் ஸ்தாபனங்களையும் சார்ந்திருந்தன. அவற்றின் சொந்த அரசுகளின் உள்ளே அவர்கள் சோவினிசத்தையும் பிராந்திய வாதத்தினையும் பிரச்சாரம் செய்வதன் மூலம் தமது ஆட்சியை நியாயப்படுத்த முயன்றனர்.


## பால்கன் சமஷ்டி

மார்க்சிச இயக்கம், இப்பிராந்தியம் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவதற்கான உபாயமாக ஒரு பால்கன் சமஷ்டிக் கருத்துப்பாட்டினை ஆரம்பித்து வைத்தது.

சேர்பியன் சோசலிச இயக்கத்தின் ஸ்தாபகரான சுவெற்றசார் மார்க்கோவிக் 1870 பதுகளில் ஒரு பால்கன் சோசலிஸ்ட் சமஷ்டிக் கருத்துப்பாட்டினை முன்வைத்தார். சமூக ஜனநாயகக் கட்சிகளதும் தென்கிழக்கு ஐரோப்பிய குழுக்களதும் முதலாவது காங்கிரஸ் 1910 ஜனவரியில் பெல்கிரேட்டில் கூடியது. இது வளைகுடா மக்களின் பொருளாதார, அரசியல் விடுதலைக்கு அழைப்பு விடுத்ததோடு அவர்களைப் பிரித்த அனைத்து எல்லைகளையும்

10ம் பக்கம் பார்க்க

# பால்கன் பிரிவினை




1800




1913 பால்கன் யுத்தத்தினைத் தொடர்ந்து




இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர்




இன்றைய அரச எல்லைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?



லெனின் 1917ல் மாஸ்கோ ஜனத்திரளின் முன் பேசுகின்றார் - 1912-13 பால்கன் யுத்தங்களின் நிழலில் தனது கருத்துப்பாட்டை அபிவிருத்தி செய்கையில் லெனின் தேசிய பிரிவினைவாதத்தின் வீரனாக இருக்கவில்லை. லெனின் பால்கனில் தேசிய சுயநிர்ணயத்தினை பிராந்திய ஜனங்களை ஒரு சமஷ்டிக் குடியரசில் ஐக்கியப்படுத்தும் பிரச்சினையாகக் கண்டதோடு அது ஏகாதிபத்தியத்தினால் சரிக்கட்டப்பட்ட குட்டி அரசுகளின் பொருளாதார ரீதியில் பகுத்தறிவற்ற எல்லைகளைக் கிழித்து எறியும் எனவும் கண்டார். அவரின் முன்நோக்கு இன்று தொ.பு.க. வினால் ஊக்குவிக்கப்படும் வகையிலான சோவினிசத்துக்கு நேர் எதிரானது.

9 பக்கத் தொடர்ச்சி

அழித்து, பாட்டாளிவர்க்க வர்க்கப் போராட்டத்தின் மூலம் ஒரு பால்கன் சமஷ்டியைச் சிருஷ்டிக்கும் படி அழைப்பு விடுத்தது.

காங்கிரசினால் வரையப்பட்ட அறிக்கை, அத்தகைய ஒரு சமஷ்டி மட்டுமே "தனிச்சிறப்புரிமை வாதத்தில் இருந்தும் குறுகிய போக்கில் இருந்தும் எம்மை விடுவிக்கவும் ஒரு புறத்தில் மொழியினாலும் கலாச்சாரத்தினாலும் ஒரு புறத்தில் பொருளாதார ரீதியிலும் பிணைக்கப்பட்ட மக்களைப் பிரிக்கும் எல்லைகளை அழிக்கவும், இறுதியாக மக்கள் தமது தலைவிதியைத் தாமாகவே நிர்ணயம் செய்து கொள்ளும் உரிமையை மறுக்கும் நேரடியானதும் மறைமுகமானதுமான ஏகாதிபத்திய மேலாதிக்க வடிவங்களைத் துடைத்துக் கட்டவும் ஒரே வழி என்கின்றது." (பால்கன் யுத்தங்கள் - ட்ரொட்ஸ்கி, பக்கம் 30.)

கார்ள் கவுட்ஸ்கியும் அன்றைய ஏனைய முன்னணி சமூக ஜனநாயகவாதிகளும் கூட இப்பிரச்சினை பற்றி எழுதினார்கள். தெளிவானதும் - அத்தோடு மிகவும் தீர்க்கதரிசனம் மிக்கதுமான - ஒரு பால்கன் சமஷ்டிக்கான சோசலிச வேலைத்திட்ட விளக்கம் லியொன் ட்ரொட்ஸ்கியினால் உருவாக்கப்பட்டது.

1910ல் ட்ரொட்ஸ்கியால் வரையப்பட்ட "பால்கன் பிரச்சினையும் சமூக ஜனநாயகமும்" என்ற கட்டுரையில் அவர் எழுதியதாவது: "பால்கன் வாழ்க்கையின் தேசிய, அரச குழப்பங்களில் இருந்தும் இரத்தம் தோய்ந்த தடுமாற்றங்களில் இருந்தும் விடுபடுவதற்கான ஒரே வழி அங்கமான பகுதிகளின் தேசிய சுயாட்சியின் அடிப்படையில் குடாநாட்டின் அனைத்து மக்களையும் தனியொரு பொருளாதார, அரசியல் கூட்டில் இணைப்பதே. தனியொரு பால்கன் அரச வரம்பினுள் மட்டுமே மசிடோனிய சேர்பியர்களும், சஞ்ஜக், சேர்பியா மொன்டிநிக்ரோ ஒரு பால்கன் பொதுச் சந்தையின் நன்மைகளை அனுபவித்த வண்ணம் தனியொரு தேசிய கலாச்சாரச் சமூகத்தில் ஐக்கியப் படுத்தப்பட முடியும். ஐக்கியப்பட்ட பால்கன் மக்கள் மட்டுமே ஸாரிசத்தினதும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தினதும் அவமானம் நிறைந்த நடிப்புக்களுக்கு ஒரு நிஜ எதிர்த்தாக்கு தலைத் தொடுக்க முடியும்.

"பால்கன் குடாநாட்டின் அரச ஐக்கியம் இரண்டில் ஒரு வழியில் மட்டுமே அடையப்பட முடியும்: ஒன்றில் மேலேயிருந்து பலவீனமானவற்றின் இழப்புக்களின் மூலம் எது பலமானதாக நிரூபிக்கப்படுகின்றதோ - ஒரு பால்கன் அரசினை விஸ்தரிப்பதன் மூலம். ஒழித்துக்கட்டும் யுத்தங்களதும் பலவீனமான தேசிய இனங்களை ஒடுக்குவதனதும் பாதை. இது முடிமன்னராட்சியையும் இராணுவவாதத்தினையும் வலுப்படுத்தும் ஒரு பாதை. அல்லது கீழ்மட்டத்தில் இருந்து மக்கள் தாமாகவே ஒன்றிணைவது. இது புரட்சியின் பாதை. இப்பாதை பால்கன் அரச வம்சத்தை தூக்கி வீசி, ஒரு பால்கன் சமஷ்டிக் குடியரசின் கொடியைப் பறக்க விடுவதைக் குறிக்கிறது."

அத்தகைய ஒரு சமஷ்டியினை அமைப்பது தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியம் பூண்ட புரட்சிகரப் போராட்டங்கள் ஊடாக மட்டுமே யதார்த்தமாகும் என்பதை ட்ரொட்ஸ்கி தெளிவு படுத்தினார். அவர் எழுதியதாவது: "எல்லா நாடுகளையும் போலவே பால்கன் முதலாளி வர்க்கம் முதலாளித்துவ அபிவிருத்திப் பாதைக்கு காலதாமதமாகியே வந்துள்ளது. அது அரசியல் ரீதியில் மலட்டுத்தனமானதும் கோழைத்தனமானதும் திறமையற்றதுமாகும். முற்றிலும் திரும்பத் திரும்ப சோவினிசத்துடன் நாற்றம் கண்டது. (அதேநூல் பக்கம் 39-40)

சுலோற்றருக்கும் ஹோரேக்கும் இக்கருத்துக்கள் பொஸ்னியாவிலான "நிஜ போராட்டத்துடன்" எந்தவிதமான உறவும் கொள்ளாத "தன்னிச்சையான கருத்துப்பாடுகள்" அல்லாது வேறொன்றும் அல்ல. இம்முன்நோக்கின் தீர்க்கதரிசனம் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

### சோசலிசமும் பால்கன் யுத்தமும்

யூகோசலாவியாவின் துண்டுகளை இன்று ஆட்சிபுரியும் மாஜி-ஸ்டாலினிஸ்டுகளாலும் இனக்குழு வகுப்புவாதிகளாலும் - தொ.பு.க.ல் உள்ள அவர்களின் சகபாடிகளுடன் சேர்ந்து - திட்டமிட்டுப் புதைக்கப்பட்ட போதிலும் பால்கனில் சோசலிச அனைத்துலகவாதத்தின் ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ளது.

1912-13ல் பால்கன் யுத்தத்தின் வெடிப்புடன் சேர்பியன் சமூக ஜனநாயகக் கட்சியின் ஒரு பால்கன் சமஷ்டி முன்நோக்கு பரீட்சைக்குள்ளானது. இது சேர்பியன் ஆட்சியாளர்களின் யுத்த நோக்கங்களை எதிர்த்தது. ஒட்டோமன் ஆட்சியில் இருந்து பால்கனை விடுதலை செய்யும் போராட்டம் சில முற்போக்கு உள்ளடக்கத்தினைக் கொண்டிருந்த போதிலும் சேர்பியன் சோசலிஸ்டுகள் ஆளும் வர்க்கத்தின் கொள்ளைக்கார யுத்த இலக்குகளில் எந்தவிதமான நம்பிக்கையும் வைக்கவில்லை.

கட்சியின் தலைவர் டிமிட்ரிஜே டுகோவிக் 1913ல் அல்பேனியா மீதான சேர்பிய ஆக்கிரமிப்பையும், ஆக்கிரமிப்பு மூலம் கடலுக்கு வெளியேறும் ஒரு வழியைக் கைப்பற்றும் அதன் முயற்சிகளையும் கண்டனம் செய்தார். அவ்வாறே அவர் அல்பேனியாவைக் கூறுபோடும் சேர்பிய, கிரேக்க, மொன்டிநீக்ரின் வரைவுகளையும் கண்டனம் செய்ததோடு "பூரண ஜனநாயகத்தினதும் பூரண சமத்துவத்தினதும் அடிப்படையில் பால்கனின் அனைத்து மக்களதும் - அல்பேனியர்கள் உட்பட - அரசியல், பொருளாதாரக் கூட்டினை வேண்டி நின்றார். SSDP பால்கன் சமஷ்டியின் அனைத்துலகவாத கொள்கையின் அடிப்படையில் சேர்பியர்களின் இணைப்புக்கு ஆதரவு வழங்கிய அதே வேளையில், அது சேர்பிய அரசாங்கத்தின் இணைப்புக்கும் வெற்றிக்குமான முயற்சிகளை தொடர்ந்து எதிர்த்தது.

1912 அக்டோபரில் லெனினும் போல்ஷிவிக் கட்சியும் சேர்பியன் சோசலிஸ்டுகளின் நிலைப்பாட்டுடன் ஒன்றுபட்டு நின்றனர். பால்கன் யுத்தத்தினை எதிர்த்தும் எல்லாவற்றுக்கும் மேலாக பால்கனில் சிலாவிக் "விடுதலை"யை ஆதரிப்பதாகக் காட்டும் ஸார் ஆட்சியாளர்களின் நடிப்பை எதிர்த்தும் போல்ஷிவிக்குகள் ரூஷ்யத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஒரு விஞ்ஞாபனத்தினை வெளியிட்டனர்.

"கிழக்கு ஐரோப்பாவில் - பால்கன், ஆஸ்திரியா, ரூஷ்யா - பெரிதும் அபிவிருத்திகண்ட முதலாளித்துவப் பிராந்தியங்களுக்கு அருகே வெகுஜனங்கள் நிலமானித்துவத்தினாலும் சர்வாதிகாரத்தினாலும் ஆயிரக்கணக்கான மத்தியகால மிச்சசொச்சங்களாலும் ஒடுக்கப்படுவதை நாம் காண்கின்றோம். அவ்வாறே அட்ரியாட்ரிக் கரையில் மத்திய ரூஷ்யாவின் கோடானுகோடி விவசாயிகளும் பொஸ்னிய, ஹேர்ஸ்கோவினா விவசாயிகளும் நிலவுடமை அடிமைச் சொந்தக்காரர்களால் இன்னமும் சக்கையாடப் பட்டு வருகின்றனர். இந்த ஹப்ஸ்பேர்க், றோமானிய கடற்கொள்ளை அரச வம்சத்தினர் இந்த மத்தியகால ஒடுக்குமுறையை ஆதரிப்பதோடு மக்களுக்கு இடையேயான பகைமையை முடியரசின் ஆட்சியைப் பலப்படுத்தவும் பல தேசிய இனங்களின் அடிமைத்துவத்தை அழியாது நிலைபெற்று நிற்கச் செய்யும் விதத்தில் நெருப்பைக் கிளறிவிடவும் முயற்சிக்கின்றனர். கிழக்கு ஐரோப்பாவில் மன்னர்கள் மக்களைத் தமக்கிடையே பங்கிடுகின்றனர்; பரிமாறுகின்றனர்; வர்த்தகம் செய்கின்றனர். சொந்த அரச வமிச நலன்களை முன்னேற்றும் பொருட்டு ஒட்டுப்போட்ட அரசுகளின் உள்ளே வேறுபட்ட தேசிய இனங்களை ஒன்றாகச் சேர்க்கின்றனர். அடிமை முறையின் கீழ் நிலச் சொந்தக்காரர்கள் தமது பிரஜைகளான விவசாயிகளின் குடும்பங்களை உடைத்துக் கலக்குவது போல்!

"பால்கன் நாடுகளில் உள்ள எமது சகோதர சோசலிஸ்டுகள் தமது சுயநிர்ணயத்துக்கான போராட்டத்துக்கும், மக்களின் சுதந்திரத்தினைப் பூர்த்தி செய்யவும், சோசலிசத்துக்கான [illegible] பாதையை துப்புரவு செய்யவும் ஒரு சமஷ்டி பால்கன் குடியரசினை அணிதிரட்டும் கோஷமாக மக்களுக்கு விடுத்துள்ளனர். (ஒரு புரட்சிகர அனைத்துலகத்துக்கான லெனினின் போராட்டம்: பத்திரங்கள் 1907-1916; தயாரிப்புக் கால வருடங்கள் (நியூயோக் மொனாட் பிரெஸ், 1986) பக்கம் 85)

### SSDPயின் பாத்திரம்

கிறிஸ்ரியன் ரக்கோவ்ஸ்கி போன்ற தலைசிறந்த தொழிலாளர் வர்க்கப் புரட்சிகரத் தலைவர்கள் ஒரு முன்னணி போல்ஷிவிக்காக வருவதற்கு முன்னர் பல்கேரியா, றூமேனியா, சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்சில் ஒரு பிரபல சோசலிஸ்டாக விளங்கியவர். இந்த முன்நோக்கின் அடிப்படையிலேயே வளர்ச்சி கண்டவர். ரக்கோவ்ஸ்கி யுத்தத்தை எதிர்க்கவும் ஒரு பால்கன் சோசலிச சமஷ்டிக்குப் போராடவும் 1915ல் அமைக்கப்பட்ட பால்கன் புரட்சிகர சமூக ஜனநாயக சம்மேளனத்தின் (B.R.S.D.F) இணை ஸ்தாபகராக விளங்கினார்.

போல்ஷிவிக்குகளுக்கு வெளியே 1914ல் யுத்தக் கடன்களை நிராகரித்த ஒரே சோசலிசக் கட்சியாக சேர்பியன் சமூக ஜனநாயகக் கட்சி பிரபல்யம் அடைந்திருந்தது. முதலாம் உலக யுத்தம் வெடித்ததும் சேர்பியன் சமூக ஜனநாயகக் கட்சியை விடப் பெரிதாக தேசிய தேசாபிமான நெருக்குவாரங்களுக்கு ஆட்பட்ட வேறு கட்சி கிடையாது. ஹப்ஸ்பேர்க் முடிக்குரிய இளவரசரான ஆர்ச்டியூக் பேர்டினன்ட் ஒரு பொஸ்னியன் சேர்பிய தேசியவாதியினால் கொலை செய்யப்பட்டதற்குப் பதிலடியாக ஆஸ்திரியா-ஹங்கேரி சேர்பியா மீது யுத்தப் பிரகடனம் செய்தது. பார்வைக்குச் சிறியதான இச்சம்பவம் வல்லரசுப் போட்டிகளின் பவுடர் குப்பியைத் தட்டியதோடு உலகை ஒரு ஏகாதிபத்திய மனிதப் படுகொலைக்குள்ளும் இழுத்துச் சென்றது.

ஒரு தேசிய பாதுகாப்புவாதக் கொள்கைக்காகக் கவர்ச்சிகரமான வாதங்களை முன்வைக்கலாம். சேர்பியா அதன் சொந்த சுதந்திரம் ஹப்ஸ்பேர்க் முடியரசினால் அச்சுறுத்தப்பட்டதைக் கண்டது. 1915ல் மத்திய ஆதிக்கங்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. இது யுத்தத்தில் இரத்தம் சிந்தியது. பூமியில் உள்ள எந்த ஒரு தேசிய இனத்தினைக் காட்டிலும் அதன் மக்களில் பெரும் பகுதியினரை - ஐந்தில் ஒரு பங்கு - யுத்த அழிவுகளுக்கும், நோய்களுக்கும் இழந்தது.

மேலும் 1914 ஜுலையில் ஆஸ்திரியா-ஹங்கேரி சேர்பியா மீது யுத்தப் பிரகடனம் செய்த போது இரண்டு சோஷலிஸ்ட் பிரதிநிதிகள் - கக்லெறோவிக்கும் லப்ஸ்விக்கும் - தேசியப் பாதுகாப்புக்கான அரசாங்க அழைப்பினை நிராகரித்ததோடு அதற்குப பதிலாக SSDPயின் சொந்த தீர்வினை முன்வைத்தனர்: "சேர்பியா, ஒரு சமஷ்டியை கொணரும் ஒரு பால்கன் கொள்கையை அங்கீகரிக்க வேண்டும். இதை அடைவதற்கு அது ஒரு சுங்கவரி சங்கத்தினை பூர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டு போக்குவரத்து சாதனங்களை நிறுவ வேண்டும். ஒரு பொது அனைத்து பால்கன் பாராளு மன்றத்தை அமைக்க வேண்டும். நிரந்தர இராணுவத்தினை இரத்துச் செய்துவிட்டு, வல்லரசுகளின் ஒவ்வொரு தாக்குதலில் இருந்தும் எம்மைப் பாதுகாக்கும் ஒரு பொதுமக்கள் படையை நிறுவ வேண்டும்."

பால்கன் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கான இன்னுமோர் களமாகியுள்ளதாக லப்ஸ்விக் தொடர்ந்து எச்சரிக்கை செய்தார். "சேர்பியன் அரசாங்கம் இப்போது வல்லரசுகளின் ஒரு பகடைக்காயாகக் கையாளப்பட்டு வருகின்றது என நான் அஞ்சுகின்றேன்." என அவர் குறிப்பிட்டார். "யுத்தச் செலவினங்கள் மதிப்பிடப்படும் போது வல்லரசுகள் உண்மையில் பால்கனதும், ஆசியாவினதும் சிறிய தேசங்களை நஷ்டஈடாகக் கையளிக்க வேண்டிய வெறும் வஸ்துகளாகவே கருதும்."

முதலாம் உலக யுத்த காலத்தில் சேர்பிய சோசலிஸ்டுகள் நிலைநாட்டிய வீரம்மிக்க உதாரணம், இன்று இனக்குழு சோவினிசத்தின் எதிரில் அதை நியாயப்படுத்தவும் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கவும் செய்யும் தொ.பு.க. போன்றவர்களுக்கு பொருத்தமான வசைமொழியாக அமைகின்றது.

- தொடரும் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்திரசேகரன், காதர் விடுதலை

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

— ஆனந்த வக்கும்புர —

கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சிறைப்பிடிக்கப்பட்டிருந்த தொழிற்சங்கத் தலைவரும் மலையக மக்கள் முன்னணி தலைவருமான பீ.சந்திரசேகரன் பிணையில் விடுதலை செய்யவும் அக்கட்சியின் தலைவரான ஐ. ஏ. காதரை விடுதலை செய்யவும் அரசாங்கத்துக்கு நேரிட்டுள்ளது.

இவர்களின் முதலாளித்துவ அரசியலுடனான ஈடுசெய்ய முடியாத முரண்பாடுகளுக்கு இடையேயும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளும் இவர்களை விடுதலை செய்யக் கோரும் பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தது, இந்த அரசியல் படிப்பினையையிட்டு மீண்டும் ஒரு தடவை தொழிலாளர் வர்க்கத்தின் கவனம் திரும்ப வேண்டும்.

கிட்டத்தட்ட இரண்டு வருட காலம் இவர்கள் கைது செய்யப்பட்டும் ஒடுக்குமுறை சிறைகளில் தள்ளப்பட்டும் மிருகத்தனமான சித்திரவதைகளுக்கும் உள்ளாகினர். இப்போது இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட பொய்வழக்கு பொறிந்து வீழ்ந்துள்ளதோடு இந்தச் சித்திரவதைகளின் சிருஷ்டிகர்த்தாக்களான யூஎன்பி அரசாங்கமும், பொலிஸ், இராணுவமும் பொய் புனை வழக்கின் தயாரிப்பாளர்களும் குற்றவாளிகளாகச் சந்தியில் நிறுத்தப்பட்டுள்ளனர், எனினும் அரசாங்கம் புதிய அவசரகாலச் சட்டங்களை இயற்றிக் கொள்வதன் மூலம் புதிய தொழிலாளர் அடக்குமுறைகளுக்குத் தன்னை தயார் செய்து கொள்கின்றது.

இந்த வழக்கின் சந்தேகநபர்கள் தொடர்பாக யூ. என்.பி. அரசாங்கம் கையாண்ட கைதுசெய்தல், சித்திரவதை, பொய் வழக்கு விதிமுறைகள் யூஎன்பி அரசாங்கம் தனது கடந்த 17 வருடகால ஆட்சியில் முழுத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் எதிராகக் கையாண்ட இனவாத, தொழிலாளர் விரோத ஒடுக்குமுறையினை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் செல்வதாய் விளங்கியது. தோட்டத் தொழிலாளர்களை நூற்றுக்கணக்கில் கொன்றும். அவர்களின் லயன் அறைகளை நூறு, ஆயிரக்கணக்கில் தீமூட்டியும், தொழிலாளர் குடும்பங்களை ஆயிரக் கணக்கில் இருப்பிடங்களில் இருந்து துரத்தியும் யூ. என். பி. — இதொகா அரசாங்கம் நடாத்தி வந்த இந்த அடக்குமுறை எவ்வளவுதான் உக்கிரமாக இருந்த போதிலும் அதனை தமது கீழ்ப்படிவான அரசியல் பொலிஸ் படையாளாக கடமைபுரிந்த சந்திரசேகரன் போன்றோருக்கு எதிராகவும் தொடுக்க நேர்ந்தது. இந்தத் தாக்குதல்களுக்கு உள்ளான சந்திரசேகரன் தொண்டமானின் இ.தொ.கா.வின் உயர் அதிகார சபையின் அங்கத்தவராக விளங்கியதோடு, 1977 — 1985 வரை யூஎன்பி அரசாங்கத்தின் கொள்கை, அடக்குமுறைகளின் காவலனாகவும் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அம்சங்கள் சந்திரசேகரனதும் காதரதும் அவர்களது மலையக மக்கள் முன்னணியினதும் பிற்போக்கு அரசியலுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இதொகாவினுள்ளான பிளவின் பின்னர் சந்திரசேகரன் அதில் இருந்து வெளியேறி தனியான ஒரு தொழிற்சங்கத்தினையும் அரசியலமைப்பினையும் அமைத்துக் கொண்டு தொழிலாளர்களை ஏமாற்றித் திசைதிருப்பும் வேலையை வேறுவிதத்தில் தொடர்ந்ததே அவரின் கைதுக்கான காரணமாகியது. அவரின் பிளவு இதொகாவைப் போன்றே யூஎன்பி அரசாங்கத்திலும் எதிரொலித்தது.

இதற்குப் பதிலடியாக இதொகா தலைமையின் வழிநடாத்தலுடனும் உதவியுடனும் மலையக மக்கள் முன்னணி தலைமைக்கு ஒடுக்கு முறையைத் தொடுப்பதன் மூலம் சந்திரசேகரன் போன்ற முதலாளித்துவ அரசியல்வாதிகள் தொழிலாளர் முன்நிலையில் துவளும் முதலாளித்துவ தலைவர்களுடன் இணைவதும், குழுக்களை அமைப்பதும் எத்தனை கெடுதியானது என்பதைக் காட்டுகின்றது. அவரின் முதலாளித்துவச் சார்பு நிலைமையைக் கூடக் கணக்கிலெடுக்காமல் யூஎன்பி அரசாங்கம் அவரைக் கைது செய்ததற்குக் காரணம் அத்தகைய முதலாளித்துவச் சார்பு தலைமையின் கீழ்த் தன்னும் தொழிலாளர்கள் அரசாங்கத்திலிருந்து வேறாகப் பிரிந்து அணிதிரள்வதைச் சகித்துக்கொள்ள முடியாத நிலைக்கு அரசாங்கம் சென்றுள்ளதே, சந்திரசேகரனும் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களும் யூஎன்பி அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு வழங்கிய ஆதரவு காரணமாகவே யூஎன்பி அரசாங்கம் இந்த ஒடுக்குமுறையைத் திணிக்கும் சக்தியைப் பெற்றது.

மறுபுறத்தில் அரசாங்கம் இவர்களை விடுதலை செய்ததற்குக் காரணம் அது நெருக்குவாரங்களுக்கு குனிந்து போகும் நிலைக்கு வந்துள்ளது அல்ல. முதலாளித்துவ ஆட்சி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள ஒரு நிலைமையில் தொழிலாளர் வர்க்கத்தினை குழப்பியடிப்பதும் அதற்கு உக்கிரமான தாக்குதலை தொடுப்பதற்கான இத்தலைவர்களின் சேவையை உயர்மட்டத்தில் பெற்றுக்கொள்வதுமே அரசாங்கத்தின் திட்டம். இது எதிர்ப்புரட்சிக்கான முதலாளித்துவ தொழிற்சங்கத் தலைவர்களினை வழிநடாத்த ஏகாதிபத்தியவாதிகளின் சார்பில் மேலும் செயற்படுவதும் பிரிவினைத் தேசியவாதத்தினை மேலும் அப்பட்டமான முறையில் சேவைக்கு அழைப்பதுமாகும். இது ஒரு புறத்தில் தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான மிலேச்ச பாசிச சர்வாதிகாரம் தலையெடுக்கையில் சிறப்பாகத் தோட்டத் தொழிலாளர்களைத் தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பிரிவினரில் இருந்தும் ஒடுக்கப்படும் விவசாயிகளில் இருந்தும் பிரித்துப் போடும் அவசியத்துடன் பிணைந்து கொண்டுள்ளது. ஏனெனில் சந்திரசேகரனதும் அவரது சகாவான காதரதும் கோட்பாடும் வேலைத்திட்டமும் இனவாத பிளவுகளின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களை வர்க்கப் போராட்டத்தில் இருந்து தள்ளி வைப்பதுவே.

நாற்றம்கண்ட மாஓவாதியான காதரினால் முன்வைக்கப்பட்டதும் மலையக மக்கள் முன்னணியின் அடிப்படையானதுமான இக்கோட்பாடு தோட்டத் தொழிலாளர்கள் ''தனியான தேசிய இனம்'' எனவும் சுதந்திர மலையக முன்நோக்கின் அடிப்படையில் அவர்கள் தேசியவாத ரீதியில் ஏனைய ஒடுக்கப்படும் மக்களில் இருந்து தனியாக ஓரணி திரள வேண்டும் என்றது, இந்நிலைப்பாடு தோட்டத் தொழிலாளர்களின் அபிலாசைகளையன்றி தமிழ் பேசும் முதலாளி வர்க்கத்தின் நலன்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றது. தோட்டத் தொழிலாளர்கள் இந்த முன்னோக்கினை அடியோடு வெறுத்து ஒதுக்க வேண்டும்.

பிணையில் விடுதலை ஆனதுதான் தாமதம் சந்திரசேகரன் இன்று யூ என் பியின் நேரடி ஏஜன்டாகச் செயற்படும் இதொகா பொதுச் செயலாளர் எம். எஸ்.செல்லச்சாமியுடன் குசு குசு பேச்சுவார்த்தைகளுக்குச் சென்றதோடு தோட்டத் தொழிலாளர்களின் வன்ம எதிரியான சிங்கள இனவாத சிலசுக தலைவர்களுடன் அணிசேர்ந்துள்ளார். இவரது தேசியவாதம் தமிழ் பேசும் வர்த்தகர்களுக்கும் மற்றும் முதலாளிகளுக்கும் ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களிடம் சலுகைகளுக்காக கதவுதட்டும் ஆயுதமாகும். தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமான அதன் பணி: அவர்களை ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்குப் பலிகடாக்களாக்குவதே.

தோட்டத் தொழிலாளர்கள் இந்த முதலாளித்துவ தேசியவாத அரசியலை நிராகரிக்க வேண்டும். யூ என் பி அரசாங்கத்தினால் சிறைவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யத் தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களை அமைப்பதன் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவசரகாலச் சட்டம் உட்பட்ட சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் தோற்கடிக்கும் பொருட்டு புகக ஜூன் 19ம் திகதி நடாத்தும் தொழிலாளர் பேராளர் மகாநாட்டினைக் கட்டி எழுப்ப முன்வாருங்கள்.

## ஐ.நா. ருவாண்டா படைகளுக்கு ஆதரவு

ஐ நா. பாதுகாப்புச் சபை மே 17ம் திகதி ருவாண்டாவுக்கு ஒரு அகில ஆபிரிக்க இராணுவப் படையை அனுப்பவும், ஒரு சிறிய மத்திய ஆபிரிக்க நாட்டின் மீது ஒரு முழு அளவிலான ஆயுதத் தடையைத் திணிக்கவும் வாக்களித்தது. கடந்த மாதத்தில் இங்கு அரசியல், போட்டி கணக்குழு படுகொலைகள் காரணமாக 200,000 அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ''மனிதாபிமான பிராந்தியங்களின் உத்தரவாதத்துக்கு'' சுமார் 5500 படைகள் ருவாண்டாவின் தலைநகரான கிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. தலைநகரம் கைப்பற்றப்பட்டதும் ஐ. நா. படைகள் நாட்டுப்புறத்துக்கு பரந்து செல்லும்.

இந்த வாக்களிப்புக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கிளின்டன் நிர்வாகம் இராணுவ நடவடிக்கைகளை 'நடைமுறைக்கிட முடியாது' என வருணித்ததைத் தொடர்ந்தே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஐ. நா வுக்கான அமெரிக்க ஸ்தானிகர் மெடிலீன் அல்பிரைட் இதற்கு பதிலாக தன்சானியா, புரூண்டி மற்றும் அயல்நாடுகளின் எல்லைகளில் ஒரு கண்காணிப்பு வலயத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

பெரும் ஏகாதிபத்திய வல்லரசுகள் அனைத்தும் ருவாண்டா சமாதானப் படைக்கு துருப்புக்களை வழங்க மறுத்து விட்டன. அவை பல்வேறு ஆபிரிக்க முதலாளித்துவ ஆட்சியாளர்களில் சார்ந்து கொண்டு தமது நாற்றம் கண்ட வேலையைத் தொடர எண்ணின. படைகள் ஒருங்கமைக்கப்பட்டதும் தமது படைகளை அனுப்ப நைஜீரியாவும், கானாவும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளன. சிம்பாபே, கொங்கோ, தன்சானியாவும் இதில் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 500 கானாப் படைகள் உடனடியாக கிகாரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இதே சமயம் ருவாண்டா அகதிகளின் நிலைமை மோசமடைந்து கொண்டுள்ளது. மே மாத முற்பகுதியில் ருவாண்டா-தன்சானியா எல்லையில் சிருஷ்டிக்கப்பட்ட பெனாகோ அகதி முகாமில் ருவாண்டாவில் இருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 350,000 ஆகியுள்ளது. இது தன்சானியாவின் இரண்டாவது பெரும் நகரமாகும். இங்கு சுகாதார, ஆஸ்பத்திரி, தண்ணீர் வசதிகள் கிடையாது. அகதிகளில் அரைப்பங்கினர் 15 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள்—படுகொலைகள் காரணமாக அநாதைகளாக்கப்பட்டுள்ளவர்கள். இங்கு பேதி, நெருப்புக் காய்சல் போன்ற நோய்களின் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

## கொழும்பு வாழ் தமிழ் மக்கள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பழைய யூகோசலாவியாவினையும் சோவியத்யூனியனையும் உடைத்து தகர்த்து திணித்த அரசுகளதும், உலகின் ஏனைய பாகங்களில் வெடித்துள்ள இனவாத மோதுதல்களதும் வேர் இங்குதான் உள்ளது. ஒடுக்கப்படும் தேசிய இனத்தினர் ஏகாதிபத்தியத்தினதும் ஏகாதிபத்திய சார்பான ஆட்சியின் கீழும் அடையக் கூடிய விமோசனம் கிடையாது. ஒரு நூற்றாண்டு காலத்தின் முக்கிய அனுபவமும் படிப்பினையும் அதுதான். ஏகாதிபத்தியத்தினையும், பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய சார்பு ஆட்சிகளையும் தூக்கிவீசி, அனைத்துலக சோசலிசத்தினை அமைப்பதன் மூலம் மட்டுமே ஒடுக்கப்படும் தேசிய இனமும் ஒடுக்கும் தேசிய இனத்தின் தொழிலாளர்களும், ஏழைகளும் விமோசனம் அடைய முடியும். இதன் காரணமாக உலக சோசலிசப் புரட்சியின் அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இலங்கை-தமிழ் ஈழம் ஐக்கிய சோசலிச குடியரசினை நிறுவும் வேலைத் திட்டத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைக்கின்றது. தமிழ் தேசிய ஜனநாயக உரிமைகளையும் மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் பெறுவது முதலாளி வர்க்கத்தினை தூக்கி வீசி தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தினை நிறுவுவதுடன் இணைந்து கொண்டுள்ளது. வேறு எந்தவிதமான முதலாளித்துவ தீர்வுக்கும் மார்க்கம் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்க்கப் போராட்டத்தின் புதிய கட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்களாலும், கிளர்ச்சிகளாலும் நரசிம்மராவ் அரசாங்கம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்துக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான தாக்குதல்களின் மூலமாக ஏகாதிபத்திய நெருக்கடி உள்ளது. ஏகாதிபத்திய நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி உக்கிரம் கண்டு வருகின்றது. இவ்வாரத்தில் ஜேர்மன் அரசாங்கம் வெளியிட்ட புள்ளி விபரங்களின்படி இவ்வாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் 0 54 ஆகியுள்ளது: முழு ஆண்டினதும் வளர்ச்சி நூற்றுக்கு 1% ஆக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலாப வீதத்தின் வீழ்ச்சியைத் தவிர்க்கும் பொருட்டு உலகத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் மேல் சுரண்டலையும், பகற்கொள்ளையையும் கட்டவிழ்த்து விடுவது ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமாக உள்ளது.

ஓ. ஈ. சீ. டி அமைப்பின் பொருளாதார நிறுவனத்தின் தலைவர் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் அமைப்பின் சகல அங்கத்துவ நாடுகளிலும் தொழிலாளர் சட்டதிட்டங்களை அகற்ற வேண்டும் எனச் சிபார்சு செய்துள்ளார். இதன்படி சம்பளம், சேவை நிலைமைகள் தொடர்பாக இதுகாறும் இருந்து வந்த சட்டங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு. ''குறைந்த பட்ச'' சம்பளம் என்ற பேரில் இருந்துவரும் சட்டவிதிகளும் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதில் இந்த ஏகாதிபத்திய அமைப்புக்கள் அழுங்குப் பிடியாக உள்ளன.

அரசாங்க, தனியார் துறைகளிலும் சுதந்திர வர்த்தக வலயங்களிலும் போராட்டத்தில் இன்று இறங்கும் தொழிலாளர்களுக்கு புதிய மூலோபாயமும் புதிய புரட்சிகரத் தலைமையும் அவசியம். எதிர்ப்புக் காட்டுவதன் மூலம் அல்லது பேரம் பேசுவதன் மூலம் தன்னியல்பான இப்போராட்டங்களினுள் எந்த விதமான அடிப்படை வெற்றிகளையும் ஈட்டிக் கொள்ள முடியாது. தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் நாளை மேலும் மேலும் மோசமான நிலைமைக்குள் தள்ளப்படுவர். இன்று வெடித்துள்ள போராட்டங்கள், பிரச்சாரங்களினுள் தொழிற்சங்கங்களின் செயற்பாடு புதிய புரட்சிகர வேலைத்திட்டத்தினதும், தலைமையினதும் அவசியத்தினை தீர்க்கமான முறையில் சுட்டிக்காட்டுகின்றன. தொழிற் சங்கங்களும் அவற்றின் தலைமைகளும் தமது கோபரேட்வாத பரிணாமத்தை இப்போராட்டங்களுள் அம்பலமாக்கிக் கொண்டன. ''வேலைநிறுத்தம் எமது அனுமதியில்லாமலேயே ஆரம்பமாகியது. தொழிலாளர்களை திருப்பி அனுப்ப எம்மால் முடியும்'' என கொழும்பு துறைமுக வேலை நிறுத்தம் பற்றி கருத்து வெளியிட்ட சீ. எம். யூ— யூ. என். பீ. தமைமைகளின் அறிக்கை இதனை அம்பலமாக்கியது.

இன்று தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தினதும் முதலாளித்துவ எஜமான்களதும், அரசினதும் உதவி கோபரேட்வாத ஏஜன்சியாகியுள்ளது. சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ—இ. தொ. கா. அமைப்புக்கள் ஏகாதிபத்தியச் சார்பு அரசாங்கங்களுடன் கலந்துறவாடும் அரசியலை முன்னெடுக்கின்றன. இந்த தொழிற் சங்கங்களும் கட்சிகளும் வங்குரோத்தடைந்து விட்டது மட்டுமன்றி தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள், பெரும் வங்கிகள், முதலாளித்துவ எஜமானர்களின் சார்பில் தொழிற்படுகின்றன. இதற்கிடையே மத்திய வங்கி ஊழியர் சங்கம் தமது கோரிக்கைகளின் பேரிலான பிரச்சாரத்திற்கு மற்றும் தொழிலாளர்களின் ஆதரவையும் அணிதிரட்டத் திரும்பியுள்ளது.

யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டம் சோசலிச வேலைத்திட்டத்தினைத் நடைமுறைக்கிடும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தினை - இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை —நிறுவுவதுடன் இணைந்து கொண்டுள்ளது. அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஐக்கியத்தினை ஊர்ஜிதம் செய்வதன் மூலம் இந்த வேலைத்திட்டத்தினுள் போராட வேண்டும். இலங்கையினுள் இப்போராட்டத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே முன்னெடுக்கின்றது. இந்த விதத்தில் ஜூன் 19ம் திகதி பு. க. க. கொழும்பில் நடத்தும் தொழிலாளர் பேராளர் மாநாடு சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. அதில் சகல தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், மாணவர் போராளிகளை கலந்து கொள்ளும்படி தொழிலாளர் பாதை வேண்டுகின்றது.

# யேமனில் உள்நாட்டு யுத்தம்

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றிணைந்து நாட்டை அமைத்த இரண்டு ஆட்சியாளர்களின் இராணுவ பிரிவுகளுக்கு இடையே யேமனில் கடும் போர் நடைபெற்று வருகின்றது. வடக்கில் உள்ள முன்னைய யேமன் அரபு குடியரசின் படைகள் முன்னைய தென் யேமனின் தலைநகரான ஏடனை நோக்கி முன்னேறியுள்ளன. ஆயினும் கடும் தாக்குதலுக்கு முகம் கொடுத்துக் கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. வடக்கின் தலைநகரான சனாவுக்கு மே 11ல் பாய்ச்சப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 53 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர். ஏடனுக்குச் சமீபமாகவுள்ள அல்கோப்ட் அகதிகள் முகாமில் வட—தென் யேமன் டாங்கிகளின் தாக்குதலுக்குள் அகப்பட்ட 175 சோமாலிய அகதிகள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இதுகாறும் இந்த யுத்தத்தில் இடம்பெற்ற படுமோசமான பயங்கரம் இதுவாகும்.

யேமனும் தென் யேமனும் 1990 மேயில் உத்தியோக பூர்வமாக இணைந்து கொண்டன. 1993 ஆகஸ்டில் தென் யேமனின் மாஜித் தலைவரும் இணைந்து கொண்ட யேமனின் உப—ஜனாதிபதியுமான அலி சலீம் அல்பிட் சனாவில் இருந்து வெளியேறி, ஏடனுக்குத் திரும்பினார். அவர் தென் யேமன் சிவில் அதிகாரிகளில் பெரும் பகுதியினரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். அன்று தொடக்கம் இரு சாராரும் தமது ராணுவ ஆயுதக் கையிருப்பை அதிகரிப்பதிலும் யுத்தத் தயாரிப்புக்களிலும் ஈடுபட்டிருந்தனர். மே 5ம் திகதி இரண்டு தலைநகரங்களிலும் இடம்பெற்ற விமானத் தாக்குதல்கள் முழு அளவிலான எதிர்த் தாக்குதலின் ஆரம்பமாக விளங்கியது.

தென் யேமன் ஆட்சியாளர்கள் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் 'மார்க்சிஸ்டுகள்' என அழைக்கப்படுவது வழக்கமாக இருந்த போதிலும் இதற்கும் சோசலிசத்துக்கோ அல்லது தொழிலாளர் வர்க்கத்துக்கோ எந்த விதமான தொடர்பும் கிடையாது. தென் யேமன் ஒரு முதலாளித்துவ தேசியவாத ஆட்சியாளர்களைக் கொண்டிருந்ததோடு அது இராஜதந்திர முறையில் ஈராக், லிபியா, சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துடனும் கூட்டு வைத்திருந்தது. இதைக் கொண்டே அதன் இராணுவ சர்வாதிகாரிகள் 'சோசலிச' வாயடிப்புக்களில் ஈடுபட்டனர். வட யேமன் இராணுவ சர்வாதிகாரியான ஜெனரல் அலி அப்துல்லா சாலி தலைமையில் 1979ல் எகிப்து, சவூதி அரேபியா, அமெரிக்காவுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருந்தது. இதனால் இந்த அரைநிலமானித்துவ சமுதாயம் அமெரிக்க இராஜாங்கத்திணைக்கள ஊது குழல்களினால் 'சுதந்திர உலகின்' ஒரு பாகமாக அழைக்கப்பட்டது.

இவ்விரு யேமன்களுக்கும் இடையேயான பிரிகோட்டின் வரலாற்று மூலங்கள், பிரித்தானிய ஏகாதிபத்தியம் தென் பாகத்தினைக் கைப்பற்றி ஏடன் காலனியை அமைத்த ஐரோப்பிய காலனித்துவக் காலப்பகுதிக்கு நீண்டு செல்கின்றது. யேமனின் வடபாகம் ஓட்டோமன் பேரரசினால் ஆளப்பட்டு வந்ததோடு 1918ல் ஒரு முழு அளவிலான சவூதி கண்காணிப்பு வலயத்தின் கீழ் பேரளவிலான சுதந்திரம் பெற்றது.

1989ல் சோவியத் அதிகாரத்துவம் சகல உதவிகளையும் வாபஸ் பெற்றுக் கொண்டதன் பின்னர் தென் யேமன் சனாவில் உள்ள ஜனத்தொகை மிகுந்த ஆட்சியாளர்களுடன் இணைந்து கொள்ள இணங்கியது. ஆனால் இவ்விரு அரசுகளும் தமது படைகளையோ அல்லது அரசாங்க கருவிகளையோ ஒரு போதும் கலந்து கொண்டதில்லை. மாறாக மோதுதல்கள் ஆதிக்குடிகள், கணக் குழுக்களுக்கிடையே தொடர்ந்து இடம்பெற்றன. இது அருகேயுள்ள சோமாலியாவில் வெடித்த மோதுதலை ஒத்திருந்தது. இருந்த போதிலும் தெற்கில் கணிசமான அளவு எண்ணெய் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையானது ஏடனை மையமாகக் கொண்ட ஆட்சிக்கு உரிமை கொண்டாடச் செய்தது.

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் ..................................................

முகவரி: ..................................................

..................................................

..................................................

தொலைபேசி இலக்கம்: ..............................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10,

வாசியுங்கள்:

**இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?**



''தொழிலாளர் பாதை'' வெளியீடு

ரூபா. 7=00

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org